Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி


அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

PUMP
With
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

மலை: 5 சுக்கில ஹூ மாசி மீ 12 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 27 (24—02—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 3

## மார்புக்கு வெளியே இருதயம்!



சென்னையில் பெண் ஒருத்திக்கு மார்புக்கூட்டுக்கு வெளியே இருதயம் இருக்கும் நிலையில் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. நேற்று முன்தினம் ஸ்டான்லி மருத்துவ மனையில் பிறந்த இந்தக் குழந்தையையே படத்தில் காண்கிறீர்கள்.

இந்தப் பச்சிளம் சிசுவின் இருதயம், நெஞ்சுக்கு வெளியே, வலது தோள்பட்டை அருகில் வெளிப்பட்டு நீட்டிக்கொண்டிருக்கிறது.

இதுபோன்று இருதயம் உடலுக்கு வெளியே இருக்கும் நிலையில் குழந்தை பிறப்பது மிகவும் அபூர்வமானது என்றும் 1985 ஆம் ஆண்டு வரை உலகில் இதுவரை இது போல் 5 குழந்தைகளே பிறந்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

உடலின் வெளிப்பகுதியில் இருதயம் இருப்பதால் "பெரிகார்டியம்" என்று கூறப்படும் இருதயக்காப்பு உறை இந்தக் குழந்தைக்கு இருக்கவில்லை. (உ)

## கைதிகள் அனைவரும் விடுதலை

சென்னை, பெப் 24

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தன்னுடைய காவலில் வைக்கப் பட்டிருந்த 774 பேரையும் இந்தியப் படை விடுதலை செய்துவிட்டது.

சென்னையில் அமைதிப் படைப் பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# மோதல்களைத் தவிர்க்க அரசு-புலிகள் இணக்கம்

## பி.பி.ஸி. பேட்டியில் மாத்தயா தகவல்

கொழும்பு, பெப். 24

அமைதிப் படையினர் வெளியேறிய பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் விடயத்தில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் உடன்பாடு கண்டுள்ளன.

கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயாவுக்கும் இடையே நடந்த பேச்சுக்களின் போது இந்த இணக்கம் காணப்பட்டது.

பேச்சுக்களின் பின்னர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. மாத்தயா உடன்பாடு பற்றிய தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியில் திரு. மாத்தயா மேலும் சொன்னதாவது;

தமிழீழத்தில் நிலவும் பாதுகாப்பு நிலைமை பற்றியும் தமிழ், முஸ்லிம் மக்களின் சந்தேகம், அச்சங்கள் பற்றியும் ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கினோம்.

இந்திய இராணுவம் வெளியேறியதும் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற பீதி நமது மக்கள் மத்தியில் பரவலாகத் தோன்றியிருப்பதை எடுத்துக் கூறினோம்.

பேச்சுக்கள் மூலமே தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கத் தாம் விரும்புவதாகவும் இராணுவ அணுகுமுறையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அப்படியான சூழ்நிலை ஒருபோதும் ஏற்படாமல் தான் பார்த்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி எமக்கு உறுதியளித்தார் — என்றார் மாத்தயா.

## யாழ் தொலைபேசி சேவை இன்று சீரடையும்!

யாழ்ப்பாணம், பெப் 24

யாழ் நகருக்கான தொலைபேசிச் சேவை இன்று சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் கோட்டை, பழைய தபால் கந்தோர் ஆகியவற்றுக்கு அருகில் திருடர்களால் வெட்டப்பட்ட பிரதான தொலைபேசி வயரை மீண்டும் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்றே மேற்கொள்ளப்பட்டன.

வெட்டப்பட்ட பகுதியில் மீண்டும் வயர் பொருத்தப் பட்டுள்ளது. இணைப்புகள் இன்று வழங்கப்படும் என தொலைத் தொடர்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் மீண்டும் மீண்டும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதும்- வெட்ட வெட்ட தாங்கள் மீண்டும் புதிய வயர்களைப் போட்டு இணைப்புகளை வழங்குவதும் வழக்கமாகிவிட்டது என்று அந்த அதிகாரி கூறினார்.

இதுவே கடைசித் தடவை. இனிமேல் இப்பகுதியில் வயர்கள் வெட்டப் பட்டால் யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்புச் சேவையை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றார் அந்த அதிகாரி. (உ)

## 20 பேர் விசாரணையில்

கொழும்பு, பெப். 24

பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவின் கொலை தொடர்பாக பொலீஸார் 20 பேரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (உ-எ)

## சுபநேரம்

24 — 02 — 1990
சனிக்கிழமை மாசி 12

சுபநேரம்:
3 . 30 முதல் 5. 00 வரை

ராகுகாலம்:
9 . 30 முதல் 11 . 00 வரை

போதாயன அமாவாசை

# அரசு-புலிகள் பேச்சு; குழப்ப சிலர் முயற்சி!

## பிரேமாவிடம் புலிகள் கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்-24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மாசு கற்பித்து, அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுக்களைக் குழப்புவதற்குச் சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸவை வியாழன் இரவு சந்தித்த போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) இத்தகவலைத் தெரிவித்தார்,

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி பிரேமதாஸாவை அவரின் சுசரித்த வாசஸ்தலத்தில் வியாழன் இரவு சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியது.

இந்தக்குழுவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திர ராசா (மாத்தயா) பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடிலே பாலசிங்கம், திரு. சுரேஷ் ஆகியோர் இடம்பெற்றனர்.

ஜனாதிபதியுடன் அமைச்சர் சாகுல் ஹமீது, ஜெனரல் சேபால ஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, பொலீஸ் மாஅதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டால் யுத்த நிறுத்தத்திற்குப் புலிகள் தயார்!

ஈ. பி. ஆர். எல். எவ். தலைமையிலான மாகாண சபை கலைக்கப்பட்டால் அதன்பின்னர் மற்ற இயக்கங்களுடன் பூரண சண்டை நிறுத்தம் ஒன்றை ஏற்க தாங்கள் தயார் என்றும் திரு. மாத்தயா பி. பி. ஸி. பேட்டியில் தெரிவித்தார்.

மாகாணசபை கலைக்கப் பட்டபின்னர்தான் தேர்தல் நடத்துவது பற்றிய திகதியை முடிவுசெய்ய முடியும் என்றும் அவர் சொன்னார்,

மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விடுதலைப் புலிகளும் முற்றாக ஆயுதங்களை ஒப்படைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் விஜேரத்னா கூறியதுபற்றி வினவியபோது திரு. மாத்தயா ஏதும் விளக்கம் தர மறுத்துவிட்டார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள், அபாயங்கள் இருக்கும்வரை விடுதலைப்புலிகள் காட்டுப்பகுதியில் தங்கி தங்களைக் காத்துக்கொள்ளவேண்டிய ஓர் அவசியம் இருக்கிறது என்பதை திரு. மாத்தயா சூசகமாகச் சுட்டிக்காட்டினார்,

விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் உட்பூசல் என்ற செய்தியை திரு. மாத்தயா முற்றாக மறுதலித்தார்.

திரு. பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று உண்மைக்குப் புறம்பான தகவல்கள் முன்னர் வந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார் (உ-எ)

## அரசமைப்பின் 6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கினாலேயே புலிகள் தேர்தலில் குதிப்பர்

முதலில் இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டும். அதன் பின்னரே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தேர்தலில் குதிக்கும்-

—இவ்வாறு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் திரு. மாத்தயா வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

பிரிவினைக் கோரிக்கைக்கு எதிராகஅரச ஊழியர்களையும்தேர்தலில் பங்குபற்றுவோரையும் சத்தியப் பிரமாணம் செய்யக் கட்டாயப் படுத்தும் சட்டஷரத்துக்கள் இந்த அரசமைப்புத்திருத்தத்தின்மூலம் கொண்டுவரப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (உ)

## மட்டக்களப்பில் அரசியல் குழுக் கூட்டம்

தேர்தல் உத்திகள் பற்றி ஆராய்வதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் குழு மட்டக்களப்பில் கூடவிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா நேற்று மாலை கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குப் புறப்பட்டார். (உ-எ)

## அவசரகாலச் சட்டம் அடுத்த மாதம் வாபஸ்

நாட்டில் பொதுவாக பாதுகாப்பு நிலைமை சீராகி வருகிறது. ஆகவே அடுத்த மாதம் அவசரகாலச் சட்டத்தை நீக்க முடியும் என்று அரசு நம்புகின்றது.

நாடாளுமன்றத்தில் வியாழன் மாலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவசரகால நீடிப்புப் பற்றிய பிரேரணை மீதான ஏழரை மணித்தியால விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## திருக்கேதீச்சரத்தில் பக்தர் கூட்டம் அலைமோதல்

யாழ்ப்பாணம், பெப். 24

சிவராத்திரியை ஒட்டி என்றுமில்லாத அளவு பக்தர்கள் கூட்டம் நேற்று திருக்கேதீச்சரத்தில் அலைமோதியது.

சிவராத்திரியை முன்னிட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை உட்பட நாட்டின் பலபாகங்களிலும் இருந்து ஏராளமானபக்தர்கள் இம்முறை திருக்கேதீச்சரத்தில் கூடினார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வடபிராந்திய பஸ்கள் மூலமாகவும், தனியார் பஸ்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பக்தர்கள் சென்ற பஸ் குடைசாய்ந்து 15 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 24

திருக்கேதீஸ்வரத்துக்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று நேற்றுப்பகல் கேரதீவுப் பகுதியில் குடைசாய்ந்ததில் 15 பேர் வரையில் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் அநேகர் மாணவர்கள் என்றும் தெரியவந்தது. (ஒ-10)

## மனித உரிமை மீறல் சம்பவங்கள்: எதிர்க்கட்சிகள் மாநாட்டை கூட்ட சிறிமா முயற்சி!

மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆராய எதிர்க்கட்சிகளின் மாநாடு ஒன்றை எதிர்க்கட்சித்தலைவி திருமதி பண்டாரநாயக்கா அழைத்திருக்கிறார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இம் மாநாடு நடைபெறும் என்று திருமதி பண்டாரநாயக்கா கடந்த வியாழன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவுடனும் சுதந்திரக்கட்சி இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டுள்ளது" என்றும் திருமதிபண்டாரநாயக்கா சொன்னார்.

## படையினருக்கு எதிராக மக்கள் கோடரியையும் பயன்படுத்தலாம்!

### பாதுகாப்பு அமைச்சரின் அறிவுரை

கொழும்பு, பெப் 24

சட்டவிரோதமாகக் கைது செய்வது அல்லது கடத்த முயல்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதுகாப்பு படையினரிடம் இருந்து தப்ப கோடரியைப்பயன்படுத்தலாம்,

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாகடந்த வியாழன் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இரவு நேரங்களில் எவரையும் கைது செய்யவேண்டாம் என்றும்—

வீடுகளில் தேடும் பணியில் ஈடுபடவேண்டாம் என்றும் பொலீஸாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த 'இரவு நேரத்' தடையைமீறும் பாதுகாப்புப் படையினரை எதிர்க்கும் நபருக்கு அரசு ஆதரவு இருக்கும் என்றும் அமைச்சர் விஜயரத்னா உறுதியளித்தார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் நாய்க்குட்டிகள் அழகான தனிரகம் wormed and weaned வயசு 1½ மாதம் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம்பர்- 181, கோவில் வீதி, நல்லூர். (11849)

நல்ல நிலையில் உள்ள சிங்கர் தையல் மெசின்கள் விற்பனைக்குண்டு. முகவரி: சிவாஸ் மல்ரி சொப்பிங் சென்ரர், மருதடி அருகில், மானிப்பாய். (2617)

ஸ்கூட்டர் (வெஸ்பா- 8 ஸ்ரீ 957) விற்பனைக்கு உள்ளது. விலை 12500/- நேரில் தொடர்பு கொள்ளவும். 46. பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (11847)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் சர்வோதய ஸ்தாபனம் பின்பக்கமாக 10 பரப்பு நன்னீர் காணி (கல்யாணத் தோட்டம்) உடன் விற்பனைக்குண்டு கோவில்கள் பாடசாலைகள் அருகாமையில் உண்டு தொடர்பு கொள்ளவும். திருமதி நாகம்மா நாகநாதி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு-2 (2630)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள். சபாப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்று கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

புத்தம் புதிய Eastern Bicycle விற்பனைக்கு உண்டு எல்லா உபகரணங்களுடன் தொடர்பு கொள்க. S. Pavendra 47, Temple Road, Jaffna. (2613)

J.V.C. 70E வீடியோ கமெரா W.V.P 100 வீடியோ கமெரா N.V 100 Portable வீடியோ டெக் என்பன விற்பனைக்கு உண்டு. வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (2587)

### கணிதம் - மயூரதி வெளியீடுகள்

G. C. E O/L கணிதம் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன, ரூ. 17/50, ரூ. 30/- ஆண்டு - 9 கணிதப் பயிற்சி I மயூரதி வெளியீடு - 6, ரூபா 16.50 பூபாலசிங்கம். ஸ்ரீ லங்கா, ஞானசுரபி, தூர்காஸ்ரேசனஸ், மற்றும் புத்தகசாலைகளில் (2574)

### சமூகக்கல்வி

வெளிவந்துள்ளது! விற்பனையாகின்றது!!, சமூகக் கல்வி ஆண்டு 11 (திருத்திய புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்: ந. தர்மபாலன், சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (2576)

### புத்தகம்

சித்திரக் கதைகள் (காமிக்ஸ்), முத்து, லயன், திகில், வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகிறது. பொக்கட் கலண்டர்களும், கண்ணதாசன் எழுதிய நூல்களும், எண்சோதிட புத்தகங்களும் ஏராளமாக வந்துள்ளன. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம யாழ்ப்பாணம். (2596)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். Second Hand Book House, 13, ஸ்ரான்லி வீதி, (முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் வைத்தியலிங்கம் மரக்காலை லேன்) யாழ்ப்பாணம். (2633)

### ஜோதிடம்

வெளிவந்து விட்டது. சனி மாற்றம் ரூ. 4/- எங்கும் கிடைக்கும். எல்லா ராசி பலன்களும் அடங்கியது. விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். நூலாசிரியர் (ஆத்மசோதி) Prof. சத்தியதாஸன் Mech- Eng., Elec - Eng. காங்கேசன்துறை. (2635-A)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Unsex) தனி சிகப்பு கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்), கறுப்பு வரிசேவல், (Dekalb) பிறவுண் பேடு, சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (28-2 90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா ஒழுங்கை, சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (11850)

### தேவை

விறகு கொத்துவதற்கு உடனடியாக ஆட்கள்தேவை. ஒரு நாளைக்கு 100/- முதல் 150/- வரை உழைக்கலாம். நேரில் வரவும். தம்பியையா விறகு காலை 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (11848)

யாழ் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் கனியார் நிறுவனம் ஒன்றின் கட்டிட அலுவலகம் (Building Construction Office) ஒன்று அமைப்பதற்கு ஒரு வீடு உடன் தேவைப்படுகிறது. No -626 C/o உதயன் (2609)

யாழ் நகரில் இயங்கிவரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்களும் பிறேசியர் (Brassiers) வெட்டுவதிலும் கைப்பதிலும் அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை. மிகவும் அனுபவம் உடையவர்களுக்கு தகுதியான சம்பளம் வழங்கப்படும். 5-3-90 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். No. 627, C/o உதயன். (2616)

### WANTED Audit/ Accounts Trainees

Those who have Passed the G. C. E. A/L with Accounts As a Subject could apply. Apply immediately to-office manager, Accounting Systems & Services (Jaffna) Ltd 484/1 Hospital Road, Jaffna. (11905)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து வாணிபர் குல செவ்வாய்ப் பாவம் குறைந்த வர்த்தகருக்குப் பெற்றோர் 20-28 வயதுக்கிடைப்பட்ட அழகிய மணப்பெண்ணைத் தேடுகின்றனர். எம்மிடம் எல்லா இன மக்களிலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2624)

### மணமகள் தேவை

யாழ் இந்து வெள்ளாளர் குலத்தைச் சேர்ந்த பெற்றோர் 30 வயது கிரகபாவமற்ற நோர்வேயில் வசிக்கும் மகனுக்கு அழகும் குணமும் கல்வியறிவும் உள்ள பெண்ணைத் தேடுகிறார்கள். திருமணத்தின் பின் பெண் நோர்வேக்கு அழைத்துச் செல்லப்படுவார். குறிப்புடன் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 103, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (11840)

### வீடு தேவை

அரச பணியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு ஒன்று குத்தகைக்கு அல்லது வாடகைக்குதேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்க. ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3898)

### வாடகைக்கு

பெண்களுக்கான இருப்பிட வசதிகள் உணவுடன் வாடகைக்கு உண்டு. படிப்பதற்கு ஏற்ற சூழல், 16/2, முதலாம் ஒழுங்கை, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம் (அருள் ஆச்சிரமம் முன்பாக உள்ள ஒழுங்கையில் 2 ஆவது வளைவில்) (2640)

### German Language Classes

பட்டப் படிப்புகளைத் தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 26-02-90 இல் ஆரம்பமாகின்றன. இப்பாஷையுடன் தொடர்புள்ள மொழிபெயர்ப்புகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Director of Studies German Cultural Association 33, Kandy Road, Jaffna. (11904)

### கல்வி

உள்நாட்டு மற்றும் லண்டன் பரீட்சைகளுக்கான ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கில கணக்கியல் வகுப்புகளுடன் ஆங்கில வகுப்புகளும் லண்டன் சித்திபெற்ற ஆசிரியரினால் நடாத்தப்படுகின்றன. 16/2. முதலாம் ஒழுங்கை, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம். (அருள் ஆச்சிரமம் முன்பாக உள்ள ஒழுங்கையில் 2வது வளைவில்) (2639)

பல்வேறு இடங்களில் குறுகிய கால ஆங்கில பயிற்சிகளை பெற்ற பின்னரும் வசனம் அமைக்கவோ வாசிக்கவோ (உச்சரிக்கவோ) முடியாதிருப்பவர்களுக்கான பயிற்சிகளை இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் அளிக்கப்படுகிறது. தொடர்பு: S. ஜெயராஜா கல்யாணி, ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் ஓட்டுமடம் யாழ்ப்பாணம். 2479

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை. 165. மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717)

தங்கள் சகல பத்திரங்களையும் மிகவும் தெளிவான முறையில் போட்டோஸ்ரற் செய்து கொள்ளவும், ஆங்கிலத் தட்டெழுத்து செய்து கொள்ளவும் வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை. (2588)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D. முஸ்தபா யுப்ளிபஸார் 2 ஆம் மாடி யாழ்ப்பாணம். (1996)

### வட இந்திய யாத்திரை

வட இந்தியாவின் புனித தலங்களைத் தரிசிப்பதற்கும், வழியிலுள்ள விசேடங்களைப் பார்ப்பதற்கும், ஆறுபேருக்கு மேற்படாத குழுவில் சேர்ந்துபோக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். மு. கனகசபை, இல: 6 சுவாமியார் வீதி, கொழும்புத் துறை, யாழ்ப்பாணம். (11834)

## அம்பாள் மகோற்சவம்

யாழ்ப்பாணம், பெப் 24 கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் கோவிலின் மகோற்சவம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

மார்ச் 8 ஆம்திகதி சப்பறத் திருவிழாவும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

### விருந்துபசாரத்தில் மந்திரி ரஞ்சன்

# நாட்டில் சகஜநிலை என வெளிநாட்டாருக்குத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24 இலங்கையில் சகஜ நிலை திரும்பிவிட்டது என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது

வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின உல்லாசப் பயணத்துறை அமைச்சர் ஏ எம். எஸ். அதிகாரி ஆகியோர் நேற்று முன்தினம், வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு பேசினர்.

அப்போதே இதனை அவர்களுக்குத் தெரிவித்தனர்.

''இச் செய்தியை உங்கள் நாடுகளுக்கு உடனடியாக அறிவியுங்கள்'' — என்றும் அமைச்சர்கள் வெளிநாட்டு ராஜதந்திரிகளைக் கேட்டுக் கொண்டனர். (ஒ-எ)

### விஞ்ஞான இதழ் வெளியீடு

கிளிநொச்சியில் உள்ள சமூக விஞ்ஞான வெளியீட்டகம் ''சமூக விஞ்ஞான சுடர்'' என்னும் அறிவிதழ் ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்த சஞ்சிகையின் முதலாவது இதழில் இந்து மதத்தின் மெய்யியல்உருவகங்கள், பாலியல் விவகாரங்களில் விஞ்ஞான நோக்கற்ற சில சமூக விழுமியங்கள், மதமாற்றத்தின் சமூக விளைவுகள், கே. டானியலின் 'பஞ்சமர்' நூல் திறனாய்வு முதலிய விடயங்கள் இடம் பெறும் என அறிவிக்கப்படுகிறது. (க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**திரு. இலங்கையர் செல்லையா**

முன்னாள் கச்சாய்கிராமசபைத்தலைவர்சமாதானநீதவான்

மலர்வு:- 17 - 05 - 1918

உதிர்வு:- 25 - 01 - 1990

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை யெல்லாம் வழிகாட்டியதுடன் திடீரென எம்மை யெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஈமைக் கிரியைகளின் போது பங்கு கொண்டோருக்கும் அனுதாபத் தந்தி அனுப்பியோருக்கும் எமது இதயம் கனித்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கச்சாய வீதி
கொடிகாமம்
24 - 02 - 90

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்:

(11841)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**த. தாமோதரம்பிள்ளை**

அவர்கள்

தோற்றம்: 12-12-1915

மறைவு: 26-1-1990

தெய்வமாகிவிட்ட எங்கள் அன்புப்பப்பா! எங்களையெல்லாம் ஆழ்ந்த கவலையில்ஆழ்த்தி விட்டு 25/10/1987 அன்று அநியாயமாக அழிக்கப்பட்ட தெய்வமான அம்மா உங்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டார்.

அம்மாவின் ஆத்மாவோடு உங்கள் ஆத்மாவும் சேர்ந்துஇறைவனடியில்சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்களை என்றும் மறவாத பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பிள்ளைகள்:
தா. புவனேந்திரநாதன் - லண்டன்
தா. தவீந்திரநாதன்
திருமதி. மா சோமசேகரன்
திருமதி. இ. சிறீராகுலன்
திருமதி. அ. கணேசலிங்கம்

கேணியடி,
[illegible]
திருநெல்வேலி.

(2621)

## கிருகயக்ஞம்

11—02—90 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
சுழிபுரம்
**சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் சோமஸ்கந்தக்குருக்களின்**
ஆத்ம சாந்திக்காக 25—02—90 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் கிருகசாந்தி, மதியபோசன நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்
மருமக்கள், சகோதரர்கள்

சோ. ஜெயகுமாரசர்மா,
சுழிபுரம்.

(2636)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர். அல்பேட் யேசுதாசன்**

(முன்னாள் பிரதம சிறாப்பர் கச்சேரி மன்னார்)

மண்ணில்: 20- 07- 1939

விண்ணில்:- 24- 02- 1985

அன்பின் திரு உருவே!
பண்பின் இருப்பிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
கருணையின் நிலைக்களமே!
என்றும் தங்கள் நினைவுதான்
ஐந்தாண்டு கழிந்த இன்று
எங்கள் இதய அஞ்சலியினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

நீங்காத நினைவுகளோடு
தாய், பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

வேளா தோப்பு,
கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம்.

(2607)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ஆ. பொன்னுசாமி**

தோற்றம்: 25-01-1927

மறைவு: 16-2-1988

திதி: 24-2-1990

உங்கள்ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்
அன்பு, மனைவி,பிள்ளைகள்

171/B மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆவது நினைவு தினம்



அன்னை மடியில்:
10—04—1967

ஆண்டவனடியில்:
27—02—1987

**ஐயாத்துரை சிவகுமார் (தம்பி)**
(முன்னாள் யாழ், பிரதம தபாலக ஊழியர்)

அன்பின் செல்வமே! ஆண்டுகள் மூன்று ஆனாலும் அழியுமோ எம் மனக்கண்ணில் உன் உருவம். அழியாத உன் உருவை எண்ணியே உருகிடும் நாம் பிரார்த்திக்கின்றோம். உன் ஆத்ம சாந்திக்காக உமது ஆத்மா சாந்தியடைய வேண்டிடும்

அன்பு
அம்மா, ஐயா, சகோதரங்கள்

இல. 94. நாயன்மார் வீதி,
நல்லூர்.
24-2-1990. (11902)

## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
21—9—1964

இராணுவ அழிப்பு:
8—3—1986

**இரத்தினசபாபதி கணேசகுமார் (கஜன்)**
வளலாய், அச்சுவேலி,

திதி: 23—2—1990

இவரின் பிரிவால் துயருறும் தாய், தந்தை, சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மருமக்கள் மற்றும் உறவினர், நண்பர்கள்.

வளலாய்,
அச்சுவேலி. (2638)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திரு. திருமேனி ஐயாத்துரை**

தோற்றம்:- 2 - 12 - 1911  மறைவு:- 25 - 01 - 1990

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் வாழவைத்த எங்கள் அன்புக்குரிய குடும்பத்தலைவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''கணேஸபதி''
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(2508)

## மனித உரிமைகள் குறித்து அமைச்சர் ரஞ்சன் சொல்கிறார்

கொழும்பு, பெப். 24

மனித உரிமைகள் எந்த வகையிலும் மீறப்படுவதற்கு அரசு அனுமதியளிக்கமாட்டாது என்று வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா தெரிவித்தார்.

''பாதுகாப்பு அமைச்சு, பொலீஸ் மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோருக்குத் தெரிவிக்காமல் எவரும் எவரையும் கைது செய்யமுடியாது'' — என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஓ-எ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப் 24

மகளிர் அபிவிருத்தி நிதியத்தின் ஆதரவில் ''பெண்களும் இன்றைய சூழலில் தலைமையின் தேவையும்'' என்னும் தலைமையிலான கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தில் நடைபெறவிருக்கிறது (சு-3)

## Y. M. C. A. YOUTH TRAINING CENTRE

**PARANTHAN**

[A, Project of the National Council of Y.M.C.A.'S of Sri Lanka]
**[Managed by Jaffna Y. M. C. A.]**

பின்வரும் முழு நேரப்பயிற்சிகளுக்கு ஆண் பயிலுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

A, **விவசாயம்** (Agriculture Course) ஒருவருடம் (இலவசம்) பின்வரும் பாடங்களின் செய்முறைப் பயிற்சியும் விளக்கக் குறிப்புகளும் அனுபவமுள்ள விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.

- (a) கோழி விஞ்ஞானம் (Poultry Science)
- (b) பாற்பண்ணை விஞ்ஞானம் (Dairy Science)
- (c) பயிர் வேளாண்மை (Crops)
- (d) பூங்கனியியல் (Horticulture)
- (e) விவசாயப் பொறியியல் (Agri. Eng.)
- (f) நீர்ப்பாசனம் (Irrigation)
- (g) உழவுஇயந்திரம்செலுத்தலும் பராமரிப்பும் (Tractor Driving & Maintenance)
- (h) பண்ணை முகாமைத்துவம் (Farm Management)
- (i) முயல் வளர்ப்பு (Rabbit Keeping)
- (j) தேனீவளர்ப்பு (Bee Keeping)
- (k) பன்றி வளர்ப்பு (Piggery)
- (l) மிருகத் தீன் உற்பத்தி (Animal Feed Manufacturing)

B. **ஒட்டுவேலைப் பயிற்சி** (Welding Course) நான்கு மாதம்

- (a) மின்பற்ற வைப்பு (Electric Welding)
- (b) வாயுபற்ற வைப்பு (Gas Welding)
- (c) உலோக வேலை (Black Smithy)

**மாதாந்த கட்டணம்: ரூபா 500/-**

● ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்கக் கற்பிக்கப்படும். பாடவிதானத்திற்கு அமைந்த சுற்றுலாக்கள் ஒழுங்குபடுத்தப்படும். இலவச தங்குமிட வசதியும், உணவும் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்க →

**R. D. MATHER**
Director

[சி-3904]

## ★ கொம்பியூட்டர் கல்வி ★

## OSCO COMPUTER CENTRE



[வல்வெட்டித்துறையில் மேற்படி பயிற்சி நிலையத்தில் கொம்பியூட்டர் பயிற்சியினை (BASIC) முடித்து இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களில் ஒரு பகுதியினர். இவர்களுக்கான சான்றிதழ்களை வல்வை சிதம்பராக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட இலத்திரனியல் கண்காட்சி விழாவின்போது, மாவட்ட நீதிபதி திரு. யோகசிகாமணி அவர்கள் வழங்கினார்கள்.]

★ **அடுத்த புதிய கொம்பியூட்டர் வகுப்பு:**
வல்வைக் கல்வி மன்றத்தில் 28 - 2 - 90 புதன் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்,
விபரங்கட்கு:- **திரு. இராமகிருஷ்ணன்,** பதிவாளர், வல்வைக் கல்வி மன்றம்.

★★ **வேலைவாய்ப்பு; Computer Instructor**
பெண்களுக்கான கொம்பியூட்டர் பயிற்சி வழங்க பெண் பயிற்றுநர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். உங்கள் விண்ணப்பங்களை; DIRECTOR, OSCO COMPUTER CENTRE, KADDU VALAVU, VALVETTITURAI என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

★★★ மேற்படி நிறுவனத்தினால் பருத்தித்துறையில் (வேலாயுதம் மகா வித்தியாலயம் முன்பாக) நடாத்தப்படும் பயிற்சி வகுப்பில் தொழில் புரியும் உத்தியோகத்தர் நலன் கருதி 5 - 3 - 1990 திங்கள் மாலை 2 மணிக்கு புதிய வகுப்பு ஆரம்பமாக உள்ளது. சேர விரும்புவோர், (G.C.E. (O/L) படித்த இருபாலாரும்) முன் கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ளவும்.

★★★★ வல்வையில் கடந்த 2 பயிற்சி வகுப்பிலும் பயிற்சி பெற்ற மாணவர்கட்கு 14 - 3 - 90 புதன் காலை 9 மணிக்கு வல்வை கல்வி மன்றத்தில் பரீட்சை நடைபெறும்.

★★★★★ வல்லை ஆவணி அமளியினால், பயிற்சியைத் தொடரமுடியாது இடையில் நின்ற மாணவர்களும், புதிய வகுப்பில் சேர்ந்து [illegible] WS; Lotus 1-2-3; D - Base ஆரம்பிக்க உள்ளோம்)

(2614)

## பதவிகள் வெற்றிடம்

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு காசாளர், எழுதுவினைஞர்கள் வெற்றிடங்களுண்டு. கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞான பாடம் படித்த பெண்கள் விரும்பத்தக்கது. தகுதி, கல்வி, எதிர்பார்க்கும் சம்பளம், மற்றும் விபரங்களுடன் 02 - 03 - 90 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல: 628
C/o உதயன்
யாழ்ப்பாணம். ((C/3960)

# Spoken English

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றி பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centreஇல் படித்த மாணவர்களின் கருத்து

Practice Makes Perfect என்று ஆரம்பிக்கும் தங்கள் பயிற்சி நிறுவனத்தின் ஆங்கிலப் பயிற்சி ஆங்கிலம் கற்பித்தலில் புதிய அணுகு முறையைக் கையாள்கிறது. இம்முறை எமக்கு மிகுந்த பலாபலன்களை அளித்துள்ளது. தங்களின் உளவியல் ரீதியான கருத்துக்கள் எவரையும் ஆங்கிலம் பேசத் துணிவு கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

செல்வி ந. அனுஷா
219/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Bright இன் ஆங்கில கல்வித் திட்டம் சிறப்பானது தபால் மூலமே இவ்வளவு சேவை செய்ய Bright Training Centre ரினால் மாத்திரமே முடியும் உண்மையிலே உங்கள் பாடத்திட்டம் சிறப்பானது.

திருமதி K. தெய்வேஸ்வரிதேவி
'இரட்ணவாசா'
மாதகல்.

I am a Student Lack of English knowledge makes it impossible to read extensioely on our Subjects. But your project is helpful to me now. I am pretty Confidence that, I can speak English fluently.

**Miss Niranjani Sivakuru**
Periya Thoddam,
Karaveddy.

## Method of Book - Keeping

### கடை கணக்கு எழுதும் முறை

**(தபால் மூலம் கல்வி)**

கடைக்கணக்கு முதல் கம்பனிகணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்தில் இருந்து கற்றுத்தரப்படும். இது ஆறு மாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இன்று நாட்டில் கணக்கு பதிவாளர் (புக்கீப்பர்) கணக்கு லிகிதர் (எக்கவுண்ட்கிளாக்), கணக்கு பரிசோதகர் (ஓடிட் கிளாக்), ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்வது மூலம் சிறந்த தொழிலினை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல்துறையில் லண்டன் பட்டம் பெற்றவரும் பதினைந்து வருடகால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடன் இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

★ இப்பயிற்சியினை திறம்பட முடிப்பவர்க்கு சிறந்த தொழில் தேடித்தரும் நற்சான்றிதழும் வழங்கப்படும்.

## Spoken Sinhala

மூன்றே மாத காலத்தில் சிங்களம் பேச, எழுத வாசிக்க உகந்த உளவியல் ரீதியான கல்வித்திட்டம். கல்வித்திட்டத்தை திறம்பட முடிப்பவர்க்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.

**புது அறிவொளி**

கலை இலக்கிய, கல்வி இதழ் ஆறு ரூபா பெறுமதியான முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம் எழுத்தாளர்களிடம் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வெளிநாட்டில் வதிவோருக்கான விமானத்தபால் மூலம் பேச்சு ஆங்கிலம் மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட கல்வித்திட்டம்.

எமது பாடத்திட்டத்தின் சிறப்பு அறிந்து டென்மார்க்கில் இருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகையான 'ஈரோ மகசீன்' ஐரோப்பா வாழ் மக்களுக்காக தமது சஞ்சிகை மூலம் எமது கல்வித்திட்டத்தை பரப்ப முன்வந்துள்ளனர் என்பதை பிறைட் ரெயினிங் சென்ரர் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

**BRIGHT TRAINING CENTRE**
P. O. BOX 162,
COLOMBO.

[சி-3859]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர்''
ஜயந்தி — 27-02-1990
'உனது நெஞ்சிற்குத் துரோகம் செய்யாதே மனச் சாட்சியின் படி நட; நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்
— பரமஹம்சர்
மில்க்வைற் சோப் மேலுறைகளிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி
ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் ஸ்ரிக்கர் ஒன்று பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற்,யாழ்ப்பாணம்.


# சஞ்சீவி

24-02-1990 சனிக்கிழமை


''பொன் கொடுத்தும் காலத்தை வாங்க முடியாது''
மில்க்வைற் சலவைப்பவுடர்
★ சருமத்திற்கு தீங்கு இழைக்காது.
★ அதன் அபரிமித நுரைவளம்
★ துரிதமாக அழுக்கைப் போக்குகிறது.
50 வெற்றுப்பக்கற் அனுப்பி ஒரு கைக்குட்டையைப் பெறுங்கள்.
மில்க்வைற்,யாழ்ப்பாணம்.

சிறப்புச் செய்தி

முதலமைச்சரின் இணக்கமின்றி

# மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை!

## ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் எழுந்துள்ள புதிய சட்டச் சிக்கல்!

கொழும்பு, பெப். 24

வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைத்து புதிதாகத் தேர்தல் நடத்துவதன் மூலம் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன அல்லவா?

ஆனால் இம்முயற்சியை மேற்கொள்வதில் சட்டச்சிக்கல் ஒன்று ஏற்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு மாகாணசபையைக் கலைப்பதற்கு இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் பார்க்கக்குறைவான அதிகாரங்களே மாகாண சபையைக் கலைக்கும் விடயத்தில் இலங்கை அரசுக்கு உள்ளது.

ஒரு மாகாணத்தின் ஆளுநரே அந்த மாகாண சபையைக் கலைக்க முடியும்.

அதுவும் அந்த மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே அதனை அவர் செய்யமுடியும்.

கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது.

ஆனால் மகாணசபையின் நிர்வாகத்தை பொறுப்பேற்று நடத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்டதாக மாகாண நிர்வாகம் நடத்தப்படவில்லை என்று ஜனாதிபதி உணர்ந்தால் அவர் மாகாண நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தலாம்.

யுத்தம் மற்றும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதக் கிளர்ச்சி காரணமாக நாட்டின் பாதுகாப்புக்குப் பயமுறுத்தல் அல்லது அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு ஏற்பட்டால் எப்படி நிறைவேற்றுஅதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி ஜனாதிபதி ஆளுநருக்கு பணிப்புரைகள் விடுக்க முடியும்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மைப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகளால் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர்வெளியேற்றப்பட்டுள்ள போதிலும் வடக்குகிழக்கு மாகாணசபை நிர்வாக இயந்திரம்செயற்பட்டுக்கொண்டிருப்பதாக முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் கருத்து வெளியிட்டார் என்று 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

''எமது கட்சிதான் இயங்க முடியாதுள்ளது. ஆனால் அரசாங்கம் இயங்குகின்றது.—இப்படி திரு. வரதராஜப் பெருமாள் சொன்னார்.

அமைதிப்படை வெளியேறிய — பின்னரும் வடக்கு கிழக்குமாகாணநிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னரும் கூட—மாகாண சபைதொடர்ந்து இயங்கும்.

முதலமைச்சர் சபையைக் கலைக்க சம்மதிக்கும்வரை, புதிதாகத் தேர்தல்களை நடத்த முடியாது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாகாணசபைக் கூட்டம் நடைபெற வேண்டும். அப்படிநடைபெறாவிட்டால் சபை இயங்குவது தானாகவே நின்று விடும்.

ஆனால் இக் கூட்டங்கள் திருகோணமலையில் தான் நடத்தப்பட வேண்டும் என்பதில்லை.

அமைதிப்படை வெளியேறிய பின்னர்—மாகாணசபை உறுப்பினகள் திருகோணமலையில் இருந்து துரத்தப்பட்ட பின்னரும் கூட-மாகாணசபைக் கூட்டங்களை கொழும்பிலும் நடத்த முடியும்.

தற்போதைக்கு வடக்கு, கிழக்குமாகாண சபைக் கூட்டம் மார்ச் 1ஆம் திகதி நடைபெற இருக்கின்றது.

அமைதிப்படை வெளியேறுவதற்கு முன் நடைபெற இருக்கும் மாகாணசபையின் கடைசிக்கூட்டம் இதுவாகும். அன்றைய தினத்தில் (மார்ச் 1 இல்) இருந்து ஜூன் வரை மாகாண சபை இயங்க முடியும்.

### வரதர் கூறுவது

''வடக்கு - கிழக்குமாகாண சபை இயங்குவதை நிறுத்துவதற்கு உள்ள ஒரே ஒரு வழி எனது பதவியில் இருந்து என்னை உடல் ரீதியாக (Physically) அகற்றுவதே யாகும்.

உடல் ரீதியாக என்னை வெளியேற்றவே அரசு முயற்சிக்கிறது. சட்டபூர்வமான முறையில் மாகாணசபையை அவர்களால் கலைக்க முடியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

சமாதான சகவாழ்வுக்குரிய தான எமது புதிய யோசனைகள் சனிக்கிழமை தமிழக முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும். அந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகின்றேன்''.

இப்படி திரு. வரதராஜப் பெருமாள் திருகோணமலையில் இருந்து தொலைபேசி மூலம் 'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தற்போதைய அரசமைப்புச்சட்டத்தின்கீழ் மாகாண சபையை ஜனாதிபதியால் கலைக்கமுடியாது என்பதே திரு. வரதராஜப்பெருமாளின் கடைசித் துரும்பு என்று 'இந்து' வர்ணித்திருக்கிறது.

## அரசு - புலிகள் பேச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

சுமார் மூன்றரை மணித்தியாலங்கள்வரை இப்பேச்சுக்கள் நீடித்தன. பேச்சின்பின்னர் இருதரப்புக் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இன்று எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி விடுதலைப் புலிகள் குழுவுடன் கலந்துரையாடினார்.

இலங்கையிலுள்ள சகல சமூகத்தவர்களும் சம உரிமைகளையும் வாய்ப்பையும் பெற்று ஐக்கிய இலங்கையின் பொருளாதார சமூக முன்னேற்றத்தை வலுப்படுத்த வேண்டும் என்பது தமது நோக்கம் என்று திரு. பிரேமதாசா எடுத்துச் சொன்னார்.

சமாதானம் இனங்களுக்கு இடையே அமைதி ஆகியவற்றைத் தாம் விரும்புவதாகக் கூறிய ஜனாதிபதி மோதல்களையோ, தகராறுகளையோ தான் ஆதரிப்பவர் அல்ல என்று தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது வடக்கு-கிழக்குப்பிரச்சினையைப் பேச்சுக்கள்மூலம் தீர்த்துவைக்க மக்களிடம் இருந்து தான் ஆணைபெற்றதாகவும் ஜனாதிபதி சொன்னார்.

நாட்டில் ஸ்திர நிலைமையையும் ஒற்றுமையையும் இனங்களுக்கு இடையே ஏற்படுத்த அதுவே தமது வழி காட்டும்நெறி என்றும் அவர் சொன்னார்.

'மோதல் முறைக்குப் பதிலாக சமரச முறையைப் பின்பற்ற நான் உறுதிபூண்டிருக்கிறேன்'—என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்திய அமைதிப்படை வாபஸான பகுதிகளில் அமைதியும் சகஜநிலையும் ஏற்பட்டிருப்பதாக திரு. மாத்தயா சொன்னார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து கொள்ள எடுத்த தீர்மானம் குறித்து சில கட்சிகள் அதிருப்தி கொண்டிருப்பதாக திரு. மாத்தயா சொன்னார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர்களும் முஸ்லிம்களும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை விளக்கி திரு. மாத்தயா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சார்பில் அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். (உ-எ)

## திருக்கேதீச்சரத்தில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாகவும் பக்தர்கள்சென்ற வண்ணமிருந்தனர்.

கடந்த 82 ஆம் ஆண்டுக்குப் பின் இம் முறைதான் பக்தர்கள் அதிகமாகக் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிவராத்திரியையொட்டி விசேட நிகழ்ச்சிகள் அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இதே நேரம் கீரிமலை சிவன் ஆலயத்திலும் ஏராளமான பக்தர்கள் கூடினார்கள். இன்று காலை கீரிமலைக்கு விசேட பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-த)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



திரு. V. K. சபாரத்தினம்
(C. A. S)

(முன்னை நாள் தலைவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி யாழ்ப்பாணம்)

இவரின் மரணச் சடங்குகள் 25-02-90 ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் நடைபெறும். அன்று காலை 8.00 மணிக்கு அவரது இல்லமான 51, பலாலி வீதி, கந்தர்மடத்தில் பஜனை இடம் பெறும். தயவு செய்து எல்லோரையும் பங்கு பற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திரு. V. S. S. K. சிவகுருநாதன்
திருமதி விஜியலஷ்மி கணேஷ்

[2643]

## மரண அறிவித்தல்கள்

### விமலாதேவி தவரெத்தினம்

கலட்டியைச் சேர்ந்த விமலாதேவி தவரெத்தினம் காலமானார். இவர் இளைப்பாறிய மராமத்து பொறியியலாளர் [ யாழ். மாநகரசபை ] தவரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற ப. சி. அ. பொன்னுத்துரை கனகம்மாவின் மூத்த புதல்வியும், தவராஜ் செல்வரஞ்சினியின் அன்புத் தாயாரும், செல்வகுமாரன் றமணியின் மாமியும், நிசாந்தினியின் பாட்டியும், பத்மினிதேவி, காலம் சென்ற மிருளாளினிதேவி, நித்தியானந்ததேவி ஆகியோரின் அன்பு சகோதரியும், மார்க்கண்டு, காலம் சென்ற பத்மநாதன் துரைரெத்தினம் திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், வாகிஸ்வரன், பத்மேஸ்வரன், சிவதர்சினி, ஜெயதாரணி ஆகியோரின் பெரியம்மாவும் காலம்சென்ற முத்துத்தம்பி, சொர்ணம்மாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-02-90) மாலை 4.00 மணிக்கு கோம்பயன் மயானத்தில் நடைபெறும்.

76, சேர்பொன் இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ' தவரெத்தினம்

(11868)

### இராசலட்சுமி சத்தியானந்தன்

இராசலட்சுமி சத்தியானந்தன் காலமாகிவிட்டார். இவர் பொன்னம்பலம் சத்தியானந்தன் (கிளி)-(முன்னாள் பரந்தன் கெமிக்கல்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி வைத்திலிங்கம் சிவயோகம்மாவின் அன்பு மகளும், உதயகுமார், சிவகுமார், தமிழரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோகராஜா' சுந்தரலிங்கம் (ஞானம்ஸ் ஸ்ரூடியோ), கிருஸ்ணவேணி, கலாவதி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தியாகராஜா, கனகரத்தினம் (கிளிநொச்சி அரசமரக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனியும், கிருஸ்ணகுமாரின் (ராசன் - நோர்வே) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவருடைய இல்லத்தில் இருந்து இன்று பி. ப. 4. 00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

22, இலந்தக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சுந்தரலிங்கம்,
(ஞானம்ஸ் ஸ்ரூடியோ)

## மரண அறிவித்தல்கள்

### திருச்செல்வம் (செல்லையா) மேரிஆன் செல்லம்மா
(மாட்டின்லேன், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாட்டின்லேனில் வசித்தவரும், தற்போது இல. 5, குமாரவீதி, முத்திரைச் சந்தையடியில் வசிப்பவருமான செல்லம்மா காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், டெய்சியின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரையின் (முன்னாள் தலைவர், அரசாங்க பொ. சே. தொழிற் சங்கம், யாழ்ப்பாணம்) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற இராசகுலம், சட்டத்தரணி ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசபாலன் (கனடா - முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், யாழ்.) யூலியட் அஞ்சலா - ரஜனி (கனடா), ஜேயெந்திரா செல்லத்துரை (கிராமசேவை அலுவலர், இருபாலை), மகேந்திரன், நாளினி (கனடா), சுரேந்திரன் (கனடா) இராஜேந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), ரவீந்திரன் (பிரான்ஸ்), லோஜினி (கனடா), ரூபினி, விஜயேந்திரன் (கனடா), நரேந்திரன், ரஜனிதேவி, அமிர்தலிங்கம் (கனடா), மங்களேஸ்வரி (யாழ்ப்பாணம் மாநகர சபை, சோலைவரிப்பகுதி) ரோகிணி, மகேஸ்வரன் (கனடா), அழகேஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பார்த்தன் (கனடா), பகீரதன் (கனடா) பவித்திரா (கனடா), தாரகா, மிதுன்ராஜ், பிருதிவிராஜ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (24—02—90) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முத்திரைச்சந்தையிலுள்ள இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: எஸ். ஜே. செல்லத்துரை (ஜேயெந்திரா)
கிராமசேவை அலுவலர்,
இருபாலை.

(11906)

### செல்வி லதா அருணாசலம்

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த செல்வி லதா அருணாசலம் அவர்களின் ஈமக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 25-02-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணியளவில் நடைபெறும். அன்னார் அருணாசலம் (France) பத்மநிதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் நிரஞ்சன் (கனடா), தனஞ்சன், சுஜாதா, ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா, பூரணம் காலஞ்சென்ற கனகசபை மனோன்மணி ஆகியோரின் அருமை பேத்தியும்,, திருமதி கனகாம்பிகை சதாசிவம் ''(லிங்கம் ஸ்ரோர்)'' இலுப்பையடி, திருமதி தயாநிதி தேவராஜா (கனடா) திருமதி சிவாநிதி காங்கேசன் ஆகியோரின் அருமை பெறாமகளும், பத்மநாதன், சபாநாதன் (கணக்காளர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில்) சிறிநாதன் (Swiss), இராஜநாதன் (France), செல்வநாதன் (Canada) ஆகியோரின் அருமைமருகனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55/4, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. பத்மநாதன்

(11861)

### இ. பொன்னம்பலம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த இளையதம்பி பொன்னம்பலம் காலமானார். இவர் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, மகேஸ்வரி, தங்கரத்தினம், இராஜேஸ்வரி ஞானசௌந்தரி, மங்கயற்கரசி, ஞானலச்சுமி, பராசக்தி, திருநாவுக்கரசு, திருலோகசுந்தரம், திருபுரசோதி ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரத பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக (24-02-90) சனிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் ,பிள்ளையான் காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(2646)

### கதிர்காமர் நல்லதம்பி

கதிர்காமர் நல்லதம்பி (விஷகடி வைத்தியர்) காலமானார். இவர் சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த கதிர்காமர் - லச்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், தணிகாசலம் சிவராசா, சசிகலபாமா, சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும், வள்ளிமுத்து, மங்கையர்க்கரசி, கனகம்மா, ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-02-90 சனிக்கிழமை பி. ப 2. 00 மணி அளவில் மீசாலை கிழக்கில் இருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாபிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
செ. தியாகராசா

(11863)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKYLINES**

For Quality Photostat Copying, Electronic Typewriting and Roneo works

281 B, CLOCK TOWER ROAD, JAFFNA.

# சஞ்சீவி சஞ்சிகை

24 - 02 - 1990 சனிக்கிழமை

தரமான

★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்

வேலைகளுக்கு

**ஸ்கைலைன்ஸ்**

281 பி, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம்

மயூரா

### பனைவள ஆய்வு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பின் உதவியுடன் பனை சம்பந்தமான பூரண ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகிறது. பனையின் பயன்பாடுகளை, பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உபயோகங்களை ஆய்ந்து, ஆராய்ந்து பூரணமான அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும் என்பது தகவல்.

பனை வளத்தை தக்கபடி பயன்படுத்த அது குறித்து பரந்த அளவில் ஆய்வுகள் வேண்டும் என இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் வற்புறுத்தி இருந்தோம். இப்போது அது செயலுருப் பெற்றமை வரவேற்கத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டில், பிரதான பங்கு வகிக்க வேண்டியது பனை வளம். இயற்கை தந்த அந்த ஒப்பற்ற செல்வத்தை, இனியாவது நாம் தக்கவாறு பயன்படுத்த வேண்டும். அதன் உற்பத்திப் பொருள்களுக்கு உள்நாட்டுச் சந்தை வாய்ப்பு மட்டுமன்றி ஏற்றுமதி வாய்ப்புகளும் இருப்பதை இப்போது அனுபவத்தில், நடைமுறையில் காண்கிறோம்.

ஆகையால், பனை வளத்தைப் பெருக்குவதற்கும், அதன் பயன்களை இயன்றவரை உச்ச அளவில் உபயோகிப்பதற்கும் பரந்த அளவிலான, திட்டமிட்ட நடவடிக்கைகள் தேவை. நீண்டகால, குறுகிய காலத்திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுவது மிக அவசியம். மகாவலித் திட்டம் போல ஒரு தீவிரமானதும், முதன்மையானதுமான அடிப்படையில் பனைவளம் பெருக்கும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பனை வளர்த்தல் — விவசாயம், பனம்பொருள் உற்பத்தி-கைத்தொழில். ஆகவே பனை வளம் இருமுகப்பட்ட பொருளியல் வளர்ச்சிக்கு உதவவல்லது. ஆகவே அதற்கு முன்னுரிமை தரப்பட்டால் இருதுறைகளில் முன்னேறலாம். பனைத் தொழில் பெருக்கத்தின் — வளர்ச்சியின் — வேகமும், பரிமாணமும் முறையே மேலும் அதிகரிக்கப்பட வேண்டும், விளைவிக்கப்படவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் இப்போதும் சரி, இனியும் சரி புனர்வாழ்வு, புனரமைப்புக் காலமே. பனை வளத்தின் இருமுகப்பட்ட துறைகளும் புனர்வாழ்வு — புனரமைப்புத் திட்டங்களில் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் பனைத்தொழிலை பொருளியல், சமூக அடித்தளங்களில் பரந்த அளவில் வேரூன்றச் செய்யமுடியும்.

ஒன்றிணைந்த, முன்னுரிமை தரப்பட்ட, தீவிரப்படுத்தப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் பனை வளமும் பெருகும், புனர்வாழ்வு — புனரமைப்பும் ஸ்திரம் அடையும். ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்துவது போல நிபுணர்களின் ஆய்வும் அறிக்கையும் அதற்கு வழி செய்யுமாக.

பனை அபிவிருத்திச்சபை மேற்கொண்டு வரும் திட்டங்கள் உரம் பெறவும், மேலும் பல புதிய வழிகள் காணவும் உத்தேச அறிக்கை உதவவேண்டும். ★

# மண்ணின் பூர்வீகத்தை ஆராய விண்ணில் வலம் வரும் 'கலிலியோ'

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ.

வானவியலின் முன்னோடிகளில் கலிலியோவும் ஒருவர்.

கலிலியோ தான் வியாழனைத் தொலைநோக்கி மூலம் முதன் முதலில் ஆராய்ந்து, அக்கோளை நான்கு துணைக் கோள்கள் சுற்றுகின்றன என்று கண்டு பிடித்தார்.

இக் காரணத்தால் வியாழன் கோளை ஆராயும் விண்கலத்துக்குக் கலிலியோவின் பெயரை அமெரிக்க விஞ்ஞானிகள் சூட்டினர்.

சுமார் 150 கோடி டாலர் (இலங்கைப் பணத்தில் 5 ஆயிரம் கோடி ரூபா) செலவில் உருவாக்கப்பட்ட விண்கலத்தின் எடை சுமார் 3 ஆயிரம் கிலோ.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் அமெரிக்காவின் கேப் கனவரல் விண்வெளி நிலையத்தில் இருந்து அனுப்பப்பட்ட 'அட்லான்டிஸ்' விண்வெளி ஓடத்தில் இருந்து 'கலிலியோ' விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது.

இதன் பயணத்திட்டப்படி 'கலிலியோ' விண்கலம் முதலில் வெள்ளிக் கிரகத்தை நோக்கிச் செலுத்தப்பட்டுள்ளது.

வெள்ளிக் கிரகத்தை ஆராய்ந்த பிறகு, அது சூரியனை வட்டமிட்டு விட்டு பூமியை நெருங்கும். பிறகு மீண்டும் சூரியனை வட்டமிட்டு விட்டு இன்னொரு முறை பூமியை நெருங்கி ஆராயும். அதன் பின்னர் தான் அது வியாழனை நோக்கிக் கிளம்பும்.

விண்வெளியில் இருந்து பூமியைநோக்கி வந்து ஆராய்கிற முதலாவது விண்கலம் என்கிற பெருமையை 'கலிலியோ' பெறவிருக்கிறது.

### வெள்ளிநோக்கி...

'கலிலியோ' இப்போது (பெப்ரவரியில்) வெள்ளிக் கிரகத்தை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அப்போது அக்கிரகத்தை எப்போதும் மூடியபடி உள்ள மேகக் கூட்டங்களின் பாணியை ஆராயும். மேகக் கூட்டங்களிடையே மின்னல் பாய்கிறதா என்றும் ஆராயும்.

### 'பூமி' சினிமா

1990 நடுப்பகுதி வரை 'கலிலியோ' விண்கலம் வெள்ளிக் கிரக ஆராய்ச்சியை நடத்தும்.

> **'கலிலியோ' விண்கலம் வெள்ளிக் கிரகத்தை ஆராய்ந்து விட்டு இரண்டு முறை பூமியை நெருங்கும். அப்போது அது பூமியை சினிமாப்படமாக எடுக்கும்.**

இந்த ஆண்டில், டிசம்பரில் கலிலியோ விண்கலம் பூமியை நோக்கி நெருங்கும் போது ஏராளமான படங்களை எடுக்கும்.

'வெளிக்கிரகவாசி ஒருவர் பூமியை நோக்கி வருவதானால் பூமியானது எப்படிக் காட்சியளிக்குமோ அவ்விதமான காட்சிகளைக் கலிலியோ படங்களாக எடுத்து அனுப்பும்' — இப்படிக் கலிலியோ திட்ட விஞ்ஞானி ரோடன்ஸ் ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

பூமியை விண்வெளியில் இருந்து ஆராய இதற்கு முன்னர் இவ்விதத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது கிடையாது என்றும் கூறுகிறார் அவர்.

பூமியின் காற்று மண்டலத்தில் குறிப்பிட்ட வாயுக்கள் மேலும் மேலும் சேரும்போது 'கண்ணாடி அறை விளைவு' (Greenhouse effect) ஏற்பட்டு பூமி சூடேற ஆரம்பித்து விடும் என்று நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

பூமி சூடேறுவதற்குக் காரணமாகக் கூறப்படுகிற மீதேன், கார்பன்டை ஒக்ஸைட் மற்றும் இதர வாயுக்



விஞ்ஞானி கலிலியோ

கள் எந்த அளவில் உள்ளன என்பதை இந்த விண்கலத்தில் உள்ள கருவிகள் விவரமாகத் தெரிவிக்கும்.

'கலிலியோ' பூமியை முதல் தடவை நெருங்கும் போது அன்டார்க்டிக்கண்டத்திற்கு மேலாகப் பறந்து ஓஸோன் மண்டல ஓட்டைகளை ஆராயும்.

'கலிலியோ' தொலைவில் இருந்து பூமியை நெருங்குகையில் தொடர்ந்து எடுக்கிற படங்கள் ஒரு சினிமாட் படம்போல அமையும்.

பிரபல விஞ்ஞானி கார்ள் சஹானின் யோசனையின் பேரில் இந்த சினிமா எடுக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்த 'சினிமா'வில் பூமியானது ஆரம்பத்தில் கீற்று போன்ற ஒரு பிறையாகத் தெரியும். பிறகு பூமி படிப்படியாகப் பெரிதாகத் தெரிய ஆரம்பித்துப் பின்னர் பூமியின் மேற்பரப்பில் 10 அடி நீளமுள்ள பொருள்கள் கூடத் தெளிவாகப் புலப்படும்.

பூமியின் மீது சூரிய ஒளி படுகிற பகுதியை இவ்விதம் 'கலிலியோ' படம் எடுத்து விட்டுப் பின்னர் விலகிச் செல்லும். அப்போது அது தொடர்ந்து 5 நாட்களுக்கு பூமியையும், சந்திரனையும் சேர்த்துப் படம் பிடிக்கும். சந்திரன் பூமியைச் சுற்றுவதை அக்காட்சிகள் காட்டும் சந்திரனின் மறுபுறத்தையும் ஆராய்ந்து படங்களைக் 'கலிலியோ' அனுப்பும்.

சந்திரனின் சுழற்சிப்பாணி காரணமாக பூமியில் இருந்து நம்மால் ஒருபோதும் சந்திரனின் மறுபுறத்தைக் காண இயலாது.

'சந்திரனின் மறுபுறத்தில் உள்ள நிலைமைகள் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன'— என்று ஜோன்ஸன் கூறுகிறார்.

சந்திரனின் வடதுருவ முனைக்கு அருகே உள்ள நிழல் பகுதிகளில் உறைபனி தென்படுகிறதா என்றும் இந்த விண்கலம் கண்டறியும். உயரே இருந்தபடி சந்திரனின் மண்ணையும் ஆராயும்.

ஏதோ ஒரு காலத்தில் பூமியில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி வீதம் சிறுசிறு வால் விண்மீன்கள் (Comets) வந்து விழுந்ததாகவும் பனிக்கட்டியால் ஆன அவை உருகியதால் பூமியில் கடல்களும், ஏரிகளும் தோன்றின என்றும் அந்தச் சித்தாந்தம் கூறுகிறது.

> **இந்த ஆண்டும், பிறகு 1992 ஆம் ஆண்டும் மிக நவீனமான விண்கலம் ஒன்று பல எரிமலைகளையும், உயர்ந்த மலைகளையும், பெருங்கடல்களையும் விஸ்தாரமான நிலப்பரப்புக்களையும், எண்ணற்ற உயிரினங்களையும் கொண்ட ஒரு கோளை ஆராயப்போகிறது.**
>
> **அக்கோள் வேறு எதுவுமல்ல, நமது பூமியே.**

அண்டவெளியில் சின்னஞ் சிறியதான நமது பூமி எங்கு உள்ளது என்பதைக் காட்டும் இப்படம் கிளர்ச்சியூட்டுவதாக இருக்கும் என்று விஞ்ஞானி கார்ள் சஹான் கூறுகிறார்.

கலிலியோ விண்கலம் மீண்டும் ஒரு முறை, அதாவது 1992 ஆம் ஆண்டில் பூமியை நெருங்கும். அப்போது பூமியின் ஈர்ப்புச் சக்தியாக அது வேகமாக இழுக்கப்படும். இதன் விளைவாக அது சுண்டி விடப்பட்டது போலாகி வியாழனை நோக்கித் தனது 6 ஆண்டு காலப் பயணத்தை மேற்கொள்ளும்.

கலிலியோ முதல் தடவை பூமியை நெருங்கும் போது அது பூமியில் இருந்து சுமார் ஆயிரம் கிலோ மீற்றரில் இருக்கும்.

இரண்டாம் தடவை வரும் போது அது பூமியை 320 கிலோ மீற்றர் தொலைவில் கடந்து செல்லும்.

### வியாழன் நோக்கி . . .

கலிலியோ விண்கலம் 1995 ஆம் ஆண்டு டிசம்பரில் வியாழனை நெருங்கி வியாழனைச் சுற்றுகிற துணைக்கோள்களையும் விரிவாக ஆராயும்.

1995 ஆம் ஆண்டில் 'கலிலியோ' வில் இருந்து சிறிய கலம் ஒன்று விடுபட்டு வியாழனின் வளிமண்டலத்தை ஆராய்ந்து தகவல் அனுப்பும்.

வியாழன் கிரகத்தின் குளிர்நிலை, காந்தப்புலம், கதிர்வீச்சு, மேகக்கூட்டங்களின் தன்மை, ஈர்ப்புச்சக்தி, வியாழனின் வானிலை, வியாழனின் வளிமண்டலத்தில் காணப்படுகிற மர்மமான 'செங்கண்' (Red Spot) ஆகியவற்றையும் 'கலிலியோ' விண்கலம் ஆராயும்.

'செங்கண்' என்பது பூமியில் இருந்து பார்க்கும்போது வியாழனின் மேற்புறத்தில் சிவப்புத் திட்டமாகக் காணப்படும் பகுதியாகும். இது சுழன்று வீசும் புயல் என்று கருதப்படுகிறது. இப்புயல் பல நூற்றாண்டுகளாக இருந்து வருவதாகும். இதன் பெயர் சிவப்புத் திட்டு. என்றாலும் இது பூமியை விடப் பெரியது. ★

# வேதனை நீங்க சாதனை செய்க!

மக்கள் படும் துன்பங்களின் வேதனைதீர சாதனைகள் செய்யவேண்டும். அதற்கு விருப்பு வெறுப்பற்ற அன்பு வழிதான் தேவையானது.

எல்லாவித வசதிகளும் இருந்தும் மனிதர்களுக்கு திருப்தி என்பது இல்லை.

இதற்கு முக்கிய காரணம் மனம் ஆகும்.

உலக விஷயங்களில் பகவான் பக்தனை தேடுகிறாரா அல்லது பக்தன் பகவானைத் தேடுகிறாரா என்ற நிலைக்கு வந்துவிடுகிறோம்.

தெய்வத்தைத் தேட வேண்டிய அவசியமே இல்லை. சத்தியத்தின் உருவமே பகவான்.

துன்பங்களுக்கு முக்கிய காரணம் மனம் ஆகும். சத்தியத்தை புரிந்துகொள்ள மறுக்கும் மனதுக்கு துன்பம் வருகிறது.

ஒளி வேகத்தை விட வேகமாகச் சிந்தனை செய்யும் மனதை கட்டுப்படுத்த முடியாத போதுதுன்பம் பெருகுகிறது.

இந்த மனக்கட்டுப்பாட்டிற்கு ஒழுக்கம் நிறைந்த நடத்தைகள் தேவை. பொருளை நோக்கி ஓடும் மனித மனம் ஆத்ம விசாரணை செய்வதில்லை.

இதற்கு வெறும் சுலோகம் சொன்னால் போதாது. அல்லது ஈடுபாடு இல்லாமல் பஜனை செய்வதால் பலன் தராது.


வெறுமனே பாபா நாமம் சொன்னால் அவரது அருள் கிடைத்துவிடுமா என்ன?

### அனுமான் கூறும் வழி

இதற்கு அனுமான் வாழ்க்கையில் ஒரு விளக்கம் உள்ளது.

> **இம்மாத ஆரம்பத்தில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா சென்னை நகருக்கு விஜயம் செய்து அருளுரைகளை நிகழ்த்தினார். அவற்றின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.**

''ராமசிந்தனை செய்தால் மட்டும் போதாது. ராமனின்



காரியத்தில் பணியில் ஈடுபட்டிருப்பதால் தான் ராமனுக்கு நெருக்கமாக இருக்கிறேன்'' என அனுமான் விபீஷணனிடம் கூறுகிறார்.

ஆகவே எந்த விஷயத்தையும் அலசிப்பார்த்து உண்மை அறியும் போக்கு, எது நிஜம் என்று அறியும் திறமை ஆகியவை மூலமே பல விஷயங்களை உணரலாம்.

இந்திரிய விஷயங்களில் புலன்களை ஓடவிட்டு விடுகிறோம். இளமையும், ஆரோக்கியமும் இருக்கும்வரை எதற்கும் மக்கள் கவலைப்படுவதில்லை.

உயிர்வாழ்க்கைக்கு சோறு முக்கியம். இதனை எவ்வளவு வீணடிக்கிறோம்.

திருவள்ளுவர் பெரிய முனிவர். வாழ்க்கைக்குத் தேவையான தத்துவத்தை கூறியவர். வாழ்க்கைக்கு தத்துவத்தை குறளாக கூறியதோடு அதன்படி வாழ்ந்தும் காட்டியவர்.

தினமும் அவர் உணவு சாப்பிடும்போது அவரது மனைவி வாசுகி கிண்ணத்தில் தண்ணீரும் ஒரு ஊசியும் வைத்து அதன்பின்பு உணவு பரிமாறுவார்.

ஆனால் இந்த ஊசிக்கும் கிண்ணத்தில் வைக்கப்படும் தண்ணீருக்கும் காரணம் வாசுகிக்கு தெரியவில்லை. திருவள்ளுவரும் இதனை பயன்படுத்துவதும் இல்லை. ஒரு நாள் வாசுகி இவற்றுக்கான விளக்கத்தை கேட்டார்.

### வாழ்க்கை நெறி

திருவள்ளுவர் 'உணவை வீணடிக்கக் கூடாது என்பது வாழ்க்கைநெறி' என்றார்.

சோறு சிந்தினால் அதனை ஊசி மூலம் எடுத்து கிண்ணத்தில் உள்ள தண்ணீரில் அலசிவிட்டு சாப்பிடவேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு என்று பதிலளித்தார்.

ஆகவே இது எதைக்காட்டுகிறது?

தத்துவத்தோடு செயல் தேவை நமக்கு முக்கியம். ஆசைப்படுவதற்கும் ஒரு அளவு தேவை. தன்னம்பிக்கை இருந்தால் எதிலும் திருப்தி ஏற்படும். மேலும் நாம் செய்யும் தியாகங்கள் மூலம் நம்மை நாமே உணரலாம்.

எல்லாரும் இன்புற்றிருக்க நமது பணி அமையவேண்டும். வேதனை போக சாதனை செய்ய வேண்டும். பிரேமை, அன்புதான் அதற்கு வழி. அதன் மூலம் மனித வாழ்க்கை உயர்ந்தது என்பதுடன் துக்கத்தையும் அகற்ற முடியும்.

**- பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா -**

(எ-4)

# அறிவியல் கட்டுரைகளை எழுதுவது எப்படி?

அறிவியலில் நாம் உணர்ச்சிமயமான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது.

அறிவியல் உண்மைகளை நாம் யதார்த்தமான வார்த்தைகளைக் கொண்டுதான் சொல்ல வேண்டும்.

விருப்பு, வெறுப்பு, புகழ்ச்சி, இகழ்ச்சி, மகிழ்ச்சி, வருத்தம் போன்றவற்றிற்கு அறிவியலில் இடம் இல்லை.

இதற்காகத்தான் அறிவியல் நடை என்றும், அறிவியல் கலைச் சொற்கள் என்றும் நாம் உருவாக்கி வைத்திருக்கின்றோம்.

உணர்ச்சியின் தன்மை வந்து விட்டால் அறிவியல் அம்சம் சிதைந்து விடும்.

ஒரு கல்வியியல் அறிஞர் சொல்வதை வாசியுங்கள்.

'நான் ஒரு மாணவனைப் புத்திசாலி என்று சொல்லும் போது அவன் எப்படிப்பட்ட மாணவன் என்று விவரிக்கின்றேனே தவிர அவனை நான் புகழவில்லை'—

இப்படி அந்த அறிஞர் சொல்வதற்குக் காரணம் இது தான். அவர் சொல்வது புகழுரையாக இருந்தால் அது அறிவியல் உண்மை இல்லை என்றாகி விடுகிறது.

'இது அபார சாதனை' என்று நாம் எழுதுகிறோம்.

'இது சாதனை' என்று சொன்னாலே போதும். 'அபாரம்' என்பது அறிவியலுக்குத் தேவையில்லை.

வேறு சிலர், 'தங்கம், வெள்ளி போன்ற உயர்ந்த உலோகங்களை எடுத்துக் கொள்வோம்' என்று சொல்கிறார்கள்.

இப்படிச் சொல்லும் போது தங்கம், வெள்ளி உயர்ந்தவை; அலுமினியம், செம்பு, இரும்பு போன்ற மற்ற உலோகங்கள் மட்டமானவை என்றாகி விடுகின்றது.

இதனை அறிவியல் உண்மை என்று நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

அறிவியலைப் பொறுத்த வரையில் தங்கம், வெள்ளி, அலுமினியம், செம்பு, இரும்பு போன்றவை எல்லாம் உலோகங்கள். அவ்வளவு தான். உயர்ந்தது, மட்டமானது என்பதெல்லாமே நமது மதிப்பீடுகள்தானே தவிர அவை அறிவியல் உண்மைகள் அல்ல.

எனவே, அறிவியல் கட்டுரைகளை நாம் எழுதும்போது கண்டிப்பாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்த்து எழுதினால் தான் அவற்றில் அறிவியல் இருக்கும். இல்லையென்றால் இலக்கியம்தான் இருக்கும்.

இப்படிச் சொல்வதால் இலக்கியம் மட்டமானது என்று பொருள் அல்ல.

இலக்கியம் வேறு. அறிவியல் வேறு.

**- ஜி. வில்சன் அமல்ராஜ் -**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலட்சிய வெறி

**- சாவ. சண்முகதாசன் -**



அவன் ஆகாயத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்படி எதனைப் பார்க்கிறான்? வானக் கடலிலே நட்சத்திரமீன்களின் நடுவே எதையோ தொலைத்துவிட்டான் போல, அவனிற்கு நித்திரை வரவில்லை.

வானம் எந்தவித கலக்கமோ, ஆரவாரமோ இன்றி மிக அமைதியாக இருந்தது.

இப்படியேஎல்லாம் இருந்துவிட்டால் எவ்வளவு நல்லது!

வளவுக்குப் பின்னால் கட்டியிருந்த மாடு அவலமாகக் கத்தியது.

பின்னிரவு நேரத்தில் அது கத்துவதுகூட படு பயங்கரமாக இருந்தது.

எதையோ நினைத்தவன் போல வேகமாக எழும்பி மாட்டுத்தொழுவத்தை நோக்கிப் போனான். நாலு வைக்கல் எடுத்துப் போட்டதும் அது அமைதியடைந்தது.

இதையாவது அமைதிப்படுத்த முடிந்ததே என்ற திருப்தியுடன் மீண்டும் திண்ணையை அடைந்து சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்தான்.

இமைக்கதவுகளும் மனக்கதவுகளும் மூட முடியாமல் மெதுவாக வீசிய தென்றல் காற்றுக்குக்கூட படபடவென அடித்துக்கொண்டன.

இருபத்திமூன்று வயதில் ஏதோ எல்லாவற்றையும் அநுபவித்து முடித்துவிட்டவன் போன்ற 'முதிர்ச்சி' முகத்தில் அப்பியிருந்தது. கண்களிற்கு கீழே நீண்ட நாட்களாக நித்திரை கொள்ளாததன் அடையாளங்கள்.

அவனை ஒத்த வயதினர் ஜேர்மனி, கனடா என்று ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு வேலையில்......

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உடுப்பு, ஒவ்வொரு...

அவனது நண்பர்கள் எல்லாம் எவ்வளவு கெஞ்சினார்கள்.

''வா மச்சான் எல்லாரும் அங்கை ஒண்டாப்போனால் ஒரே முஸ்பாத்தியாயும் இருக்கும், அதோடை எல்லாரும் ஒண்டாய் இருந்தால் பலமும்தானே''

—சந்திரன் அவனிற்கு சொன்னபோது எதையோ சொல்ல வாயெடுத்தவன் பின்னர் பேசாமல் இருந்துவிட்டான்.

ஏதோ ஒரு மன உறுதியுடன் என்ன கஷ்டம் வந்தாலும் சொந்த நாட்டிலே நிற்பது எண்டு முடிவெடுத்தான்.

இந்த நாட்டிலேயே எங்கள் அப்பா, அப்பாவின் அப்பா எல்லாரும் பிறந்தார்கள். அப்படியிருக்க எங்கள் பிள்ளைகள் மட்டும் ஜேர்மனி, கனடா ஆஸ்பத்திரிகளில் பிறக்க வேணுமா?

வேண்டாம், உயிரே போனாலும் சொந்த நாட்டைவிட்டுப் போவதில்லை என்று முடிவெடுத்தான்.

அதேவேளை கனடா போன சந்திரன் ஐம்பதாயிரம் ரூபா காசு அனுப்பிவிட்டானாம். நேற்றுத்தான் பார்வதி அக்கா வந்து சொல்லிப்போட்டுப் போனார்.

எத்தனையோ ஆயிரங்கள், இலட்சங்கள் கொடுத்து வெளிநாடு என்று எல்லோரும் ஆலாய்ப்பறக்க இவன் மட்டும் அக்காசிற்கு தேங்காய் எண்ணெய் பிழியும் மில் ஒன்றைப் போட்டான்.

வீட்டோடு அது இருந்தது எவ்வளவோ சுகமாய் போய்விட்டது அவனுக்கு.

தாயின், தமக்கையின் கைகளில் கழுத்துக்களில் இருந்தவை இயந்திரங்களாகவும் கட்டடங்களாகவும் மாறின.

அதைவிட முருகேசு மாஸ்டரிடம் வட்டிக்கு காசு வாங்கி......

ஒருமாதிரி எவ்வளவோ கஷ்டப்பட்டு வழிச்சு துடைச்சு எல்லாம் போட்டு மில் தொடங்கி இரண்டு மாதங்கூட இன்னும் ஆகவில்லை.

இரவு, பகல் முழுவதும் அதனுள் கிடந்து மாடாய் உழைத்தான்.

எவ்வளவு ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள்.

முப்பதாவது வயதினை எட்டப்போகும் மூத்த அக்காவை கரை சேர்க்கவேண்டும். ஒவ்வொரு நாளும் வேலையின் போது தேத்தண்ணிகொண்டுவந்து தரும் அக்காவின் ஏக்கப்பெருமூச்சு.

''இப்படி கஷ்டப்பட்டு உழைச்சு எப்பதான் எனக்கு...'' என்று கேட்பது போல இருக்கும். அவனது கண்களும் கலங்கும்.

மில் திறக்கும் போதுகூட ஊர்ச்சனம் வந்து அவனது துணிச்சலை மெச்சியபோதுகூட அதில் ஒரு ஏளனம்.

''ஏயெல் பாஸ் பண்ணிப் போட்டு வீணாய் இதுக்கை கிடந்து......''

ஊர்வாய் இப்படி எதையாவது கதைக்காவிட்டால் அவர்கட்கு விடியாது. அவன் இப்படி ஒன்றா இரண்டா எத்தனையைக் கடந்து வந்தவன்.

தொழில் தொடங்கி ஒரு மாதம் ஓடி விட்டது.

இப்போது தொழில் அநுபவமும், கொஞ்சம் பிரபல்யமும் கிடைத்தது.

டிராக்டர்கள் வந்து எண்ணெய் பரல்கள் ஏற்றிக் போயின.

வருவாயும் கொஞ்சம் கொஞ்சமாக உயரத்தொடங்கியது.

முதலில் வட்டிக்கு வாங்கிய கடனை அடைத்து அம்மாவின் அக்காவின் நகைகளை மீட்டு அதன் பின்......

ஒவ்வொன்றாய் வந்து கொண்டிருந்தன. வீணாய் கனடாவிலும் ஜேர்மனியிலும் தெரியாத இடத்தில், தெரியாத மொழியில் யாரோ அன்னிய நாட்டவனின் கீழே வேலை செய்வதை விட இது எவ்வளவோ மேல். அவனின் மனதில் சாந்தி கூட வந்து போனாள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிள்ளையார் கோயில் போவான். சாந்தியும் ஒவ்வொரு வெள்ளியும் வருவாள்.

சாந்தி இவனுடன் படித்தவள். அமைதியான அடக்கமான பெண்.

கொஞ்சம் வசதியாத குடும்பத்தில் பிறந்தாலும் வீட்டிற்குக் கிட்ட இருப்பதனால் அவனின் கஷ்டங்களை, சுமைகளை அறிந்தவள்.

இருவரும் கோயிலுக்குப் போகும் போது ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் காண வேண்டிவரும்.

இருவருடைய கண்களிலும் ஏதோ ஒரு ஏக்கம், ஏதோ ஒரு எண்ணம். ஆனால் இருவரும் வாய் திறப்பதில்லை. மௌனமாக கண்ணினால் பேசி விட்டு போய்விடுவார்கள்.

எதற்கும் முதலில் அக்காவைக் கரையேற்ற வேண்டும்.

இந்த ஏலாத வயதில்கூட வேறு ஒரு மில்லில் வேலை செய்யும் அப்பாவை வேலையை விட்டு நிற்பாட்ட வேணும்.

பல்வேறு யோசனைகள் அவனைத் தடை செய்யும்.

இன்னும் ஒரு மாதம் ஓடியது. எவ்வளவோ கஷ்டங்களின் ஊடாகவும் புத்தளம் போய் தேங்காய் எண்ணெய் அடிக்க தேவையான கொப்பறா ஏத்திவந்து வேலை நடந்து கொண்டிருந்தது.

இந்த வேளையில் தான் அவனின் தலையில், இல்லை! அவன் குடும்பத்தின் தலையில் இடி விழுந்தது போல் அந்தச் சம்பவம் நடந்தது.

காலையில் பேப்பரைப் பார்த்த அவனுக்கு தலை சுற்றியது.

'வடபகுதிக்கான மின் விநியோகம் குண்டு வெடிப்பினால் தடைப்பட்டது'

என்ன செய்வது என்றே புரியவில்லை. எண்ணெய் மில் வேலை செய்து இரு மாதமாகி விட்டது.

திண்ணைச்சுவரில் சாய்ந்திருந்த அவனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அவன் அழவில்லை.

திரும்பி மில்லைப் பார்க்கிறான். தூசி படிந்த இயந்திரங்கள். இரண்டு மாதம் மனித நடமாட்டமே இல்லாததால் எல்லாம் சோர்வாகி விட்டன.

இந்த மில் போட எவ்வளவு கஷ்டப்பட்டான். நகைகளை அடைவு வைத்து, அதைவிட வட்டிக்குக் காசு வாங்கி எத் பேரின்ர காலில் விழுந்து......

★ ★ ★

இந்த நேரத்தில்.........

'நான் எத்தனையோ தரம் சொன்னனான் கேட்டியா! இதில் போட்ட காசைக் கொடுத்துக் கனடா போயிருக்கலாமே'— என்ற குரல் வந்த திசையை நோக்கினான் அவன்.

பார்வதி கிண்டலாக ஒரு பார்வை பார்த்தாள்.

அவனுக்கு உள்ளத்தில் ஓர் உறுதி ஏற்பட்டது.


தடைப்பட்ட மின்சாரம் எப்படியும் ஒருநாள் வந்து தான் தீரும். ஆனால் என் இலட்சியம் தடைப்பட அனுமதித்தால்.........

'பொறுத்தார் அரசாள்வார் .........' என்ற அநுபவ மொழியை அவன் நினைத்துக் கொண்டான்.

காலம் கனிந்தது. அவன் இன்று வெற்றிநடை போடுகிறான். ★

சஞ்சீவி சிறுகதை

---



# உங்கள் குழந்தையின் வாழ்வை நீங்களே பாழாக்கலாமா?

குழந்தைகள் வண்ணத்துப் பூச்சிக்கு ஒப்பானவர்கள். அவர்கள் வாழும் உலகமோ வண்ண வண்ண மலர்கள் நிறைந்த பூஞ்சோலை. அதுவே அவர்கள் கவலையின்றி ஓடியாடி விளையாடித் திரியும் இனிய உலகம்...... சின்னமுத்து நோயினுல், அது ஏற்படுத்தும் பாரதூரமான விளைவுகளினுல், உங்கள் அன்புக் குழந்தை இந்த இன்ப உலகில் இருந்து பிரிக்கப்பட்டு இருள்சூழ்ந்த வாழ்வுக்குத் தள்ளப்படுமானுல்...... உங்கள் கவனக் குறைவினுலேயே இந்த நிலை ஏற்பட்டது எனப் பிறர் குற்றம் சுமத்துவதை உங்களால் தாங்கிக்கொள்ள முடியுமா?

சின்னமுத்து ஒரு பொல்லாத பிள்ளைப்பருவ நோய். தாய் என்ற முறையில் இந்த நோய் பற்றி நீங்களும் நன்கு அறிந்திருக்க வேண்டும். சின்னமுத்து ஓர் ஆபத்தற்ற, சாதாரண நோய் என்று நினைக்க வேண்டாம் அது மூளைக்காய்ச்சல், கண்குருடாதல், நியூமோனியா, வயிற்ருேட்டம், போஷாக்கின்மை முதலிய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லது. அசட்டையாக இருந்தால் குழந்தையின் உயிருக்கே ஆபத்தை உண்டுபண்ணக்கூடியது.

உங்கள் குழந்தைக்கு 9 மாதங்கள் நிரம்பியதும் அண்மையிலுள்ள அரசாங்கத் தாய் சேய் நலப் பராமரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசெல்லுங்கள். அங்கே இலவசமாக வழங்கப்படும் சின்னமுத்து நோய்த்தடுப்பு மருந்தை உங்கள் குழந்தைக்குப் பெற்றுக்கொடுங்கள்.

**ஒரே தடவையில் செலுத்தப்படும் இந்தத் தடுப்பு மருந்து உங்கள் குழந்தைக்கு வாழ்நாள் முழுவதும் சின்னமுத்து நோயில் இருந்து நிச்சயமான பாதுகாப்புத்தரும்.**

சுகாதார. மகளிர் விவகார அமைச்சு
யுனிசெப்

**துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துத்துறையில் மிளிர பெர்னாட்ஷா கூறும் வழி

● ஒரு சமயம் அறிஞர் பெர்னாட்ஷாவுக்கு ஒருவர் கடிதம் எழுதினார்.

''நீங்கள் சொகுசான மாளிகையில் வசிப்பதால்தான் இப்படி அரிய படைப்புக்களை உருவாக்க முடிகிறது. இப்படியான மாளிகை ஒன்றில் வாழும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தால் என்னாலும் உங்களைப் போல எழுத முடியும்''—

இதுவே அக்கடிதம்.

அதற்கு பெர்னாட்ஷா பதில் கடிதம் அனுப்பினார்.

''கடிதம் வருமாறு;

''அன்பரே! எனது படைப்புக்களில் பெரும்பான்மையானவை ஊர்ப்பூங்காவில் உள்ள 'பெஞ்ச்'சில் அமர்ந்து எழுதிவையாகும்''.

''எனவே நாளை முதல் அங்கேயே போய் அமர்ந்து இருந்து எழுத முயற்சியுங்கள். அங்கே உட்கார்ந்து உங்களுக்கு எழுத வராவிட்டால், எங்கே உட்கார்ந்தாலும் உங்களால் எழுதவே முடியாது'—

''ஆம்... எழுதவேண்டுமானால் அதற்கு அடிப்படையாக மனதிலே ஒரு உந்தலும் எண்ணங்களில் ஒரு உருவகமும் வந்தாக வேண்டும்.

''பின்னர் எங்கே இருந்தும் எழுதிவிடலாம் என்பதே ஷாவின் கருத்து. ★

## தான் பின்னும் வலையில் சிலந்தி ஏன் சிக்குவதில்லை?

● 28 தினங்களுக்கு ஒரு தரம் ஒருவன் புதியதோலைப் பெறுகிறான்.

நீங்கள் இதனை வாசித்து முடிக்கையில் உங்கள் உடலில் 5 கோடி செல்கள் இறந்து இருக்கும். அவற்றிற்குப் பதில் புதிய செல்கள் உருவாகி இருக்கும். ★

● சிலந்தி தன் வலையில் தானே சிக்கிக்கொள்ளுவதில்லை. இதற்குக் காரணம் என்ன? இது சம்பந்தமான ஆய்வுகள் இன்னமும் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளன.

ஆனால் பலரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரே காரணம் சிலந்திகளின் கால்களில் இருந்து கசியும் ஒருவகை எண்ணெய் சிலந்தியை வலையில் சிக்காமல் உதவுகிறது என்பதாகும்.

கோந்து இழையில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க இந்த எண்ணெய் உதவுகிறது.

இரசாயனப்பொருட்களின் மூலம் இந்த எண்ணெய்யை அகற்றிவிட்டால் சிலந்தி தன் வலையில் தனே அகப்பட்டுக் கொண்டு தவிக்குமாம். ★

## சோதிடர்களுக்கு எதிராக சீன அரசு பிரசாரம்

● ஜோதிடர்களை ஒழித்துக்கட்ட சீன அரசு புதிய திட்டம் ஒன்றை துவக்கியுள்ளது.

சீனாவில் 1976 ஆம் ஆண்டு கலாச்சாரபுரட்சி முடிந்தது. அதற்குப் பிறகு ஜோதிடர்கள் வேகமாக மீண்டும் சீனாவுக்குள் நுழைந்தனர். இப்போது அவர்கள் ஏராளமாகப் பெருகிவிட்டனர்.

கைரேகை ஜோதிடம் பார்ப்பது, உடற்கூறுகளைப் பார்த்து எதிர்காலம் பற்றி கூறுவதும் சீனாவில் பிரபலமாகிவிட்டது.

ஜோதிடம் பற்றிய புத்தகங்களும் அதிக அளவில் பெருகிவிட்டன.

1989 இல் ஜனநாயகப் போராட்டம் நடைபெறும் முன் முதல் நான்கு மாதங்களில் ஜோதிடம் பார்ப்பது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

மக்களிடையே மூட நம்பிக்கைப் பழக்கம் வளர்வதைத் தடுக்க ஜோதிடர்களையும், ஜோதிடப் புத்தகங்களையும் ஒழித்துக்கட்ட சீன அரசு புதிய திட்டம் ஒன்றை துவக்கியுள்ளது.

ஜோதிடர்கள் சொல்வதைக் கேட்டால் பொல்லாத பிரச்சினைகள் ஏற்படும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஜோதிடர்கள் மற்றும் ஜோதிட புத்தகங்களுக்கு எதிராக சீன அரசு தீவிர பிரசாரம் மேற்கொண்டுள்ளது.

ஜோதிடர்களை அடியோடு ஒழித்துக்கட்டும்வரை ஓயமாட்டோம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(எ-4)

### நட்சத்திர எண்ணிக்கை

● இந்தப் பிரபஞ்ச வெளியில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன.

மனிதனின் கண்களுக்கு மிஞ்சிப்போனால் 4 ஆயிரத்துக்கு அதிகமான நட்சத்திரங்களே தென்படுகின்றன.

தெளிவான ஓர் இரவில் மனிதன் ஆயிரத்துக்கு அதிகமான நட்சத்திரங்களை மட்டுமே எண்ண முடியும்.

கலிபோர்னியாவில் உள்ள பலோமர் அவதான நிலையத்தில் உள்ள டெலஸ்கோப் மூலம் விஞ்ஞானிகளால் நூறு கோடிக்கு அதிகமான நட்சத்திரங்களைப் படம் பிடிக்க முடியும். ★

## புறாக்களைக் கலைக்க ஆந்தையின் உதவியை நாடிய அமெரிக்க அரசு

''பென்டகன்'' என்று சொன்னாலே அமெரிக்காவின் அபரிமிதமான படை பலம்தான் நம் கண்முன்னால் தெரியும்.

ஆனால், அந்த பென்டகனே ஒரு சாதாரண ஆந்தையின் உதவியை நாட வேண்டிய நிலை வந்தது.

எதனால் தெரியுமா?

புறாக்களின் தொந்தரவினால் தன்னைக் காத்துக் கொள்ளத்தான். நம்பமுடியவில்லையா? இது உண்மைதான்.

இரண்டு ஹெக்டேர் நிலப் பரப்பில் பல மாடிக் கட்டடங்கள் பென்டகன் வடிவில் (அதாவது ஐந்து பக்கங்கள் கொண்டது) அமைந்துள்ளது.

இந்த வளாகத்தில் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை அமைந்துள்ளது.

பென்டகன் வளாகம் தரைக்கு மேலே 5 மாடிகளும் தரையின் கீழே இரண்டு அடுக்குகளும் கொண்டது. இங்கு பெரிய பெரிய அதிகாரிகளிலிருந்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வரை ஏறத்தாழ 25,000 பேர் வேலை செய்கிறார்கள்,

இந்தக் கட்டட வளாகம் ஜனவரி 1943இல் திறக்கப்பட்டவுடன் இந்த வளாகத்தின் முதல் வாசி யார் தெரியுமா? புறாக்கள்தான்.

ஆயிரக்கணக்கான புறாக்கள் இந்த புதிய கட்டடத்தை தங்கள் வீடாக ஆக்கிக்கொண்டு அந்த இடம் முழுவதையும் அசிங்கம் செய்யத்தொடங்கின.

பென்டகனின் உயர்மட்ட அதிகாரிகள் தங்கள் மூளைகளைப் பாவித்துக்கூட அவர்களால் இந்த விஷயத்தில் வெற்றியைக் காண முடியவில்லை.

வெறுப்படைந்த அவர்கள் மக்கள் எல்லாரிடமும் ஆலோசனை கூறும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களுக்குக் கிடைத்த ஓர் ஆலோசனை என்ன தெரியுமா?

''புறாக்களுக்கு ஆந்தைகளைக் கண்டால் மிகுந்த பயமாம். ஆகவே வராந்தாவின் முக்கிய இடங்களில் ஆந்தைகளைத் தங்கவைத்துப் பாருங்கள். அப்போது உங்களுக்குப் புறாக்களின் தொந்தரவிலிருந்து விடுதலை கிடைக்கும்'' என்பதுதான்.

பென்டகன், ஆந்தையை வேறு உள்ளே கொண்டு வந்து, ஒருவேளை அதனால் வேறுபல இடையூறுகள் உண்டாகாமல் இருக்க, உயிருள்ள ஒரு நிஜ ஆந்தையின் அளவிலேயே ஓர் ஆந்தைச் சிலையை மரத்தினால் செய்து அதனை வளாகத்தின் வாசலில் திறந்த வெளி மைதானத்தின் நடுவிலேயே நன்கு கண்ணில் படும்படி அமைத்தார்கள்.

1944 ஆரம்பத்தில் இந்த முயற்சியைக் கையாண்டார்கள். ஒன்று விடாமல் எல்லாப் புறாக்களும் அந்த இடத்தைக் காலி செய்ததைக்கண்டவுடன் மூக்கின் மேல் விரல் வைக்காத ஆசாமிகளே இல்லையாம் அமெரிக்காவில். ★

## மதம் பிடிக்காதவர் எண்ணிக்கை உலகில் எண்பத்துமூன்று கோடி!

● உலகில் இன்று 83கோடி 63 லட்சத்து 27 ஆயிரத்து 770 பேர் எந்தச் சமயத்தையும் சேராதவர்கள் என்று புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

உலக சனத்தொகையில் இவர்கள் 16.7 சத வீதத்தினர் என்று பிரிட்டானிக்காவில் கூறப்பட்டிருக்கிறது.

மொத்தம் 254 நாடுகளைக் கொண்டது. இந்த உலகம்.

எந்தச் சமயத்தையும் சாராதவர்கள் 220 நாடுகளில் வசிக்கின்றனர்.

கிழக்கு ஆசியாவில் இவர்களின் எண்ணிக்கை 64 கோடியே 17 லட்சத்து 56 ஆயிரத்து 600 ஆகும்.

ஏனைய பகுதிகளில் வசிக்கும் இவர்களின் எண்ணிக்கை வருமாறு.

ரஷ்யா: 8 கோடி 43 லட்சத்து 32 ஆயிரத்து 300.

தெற்காசியா: 2 கோடி 65 லட்சத்து ஆயிரத்து 100.

வட அமெரிக்கா: 2 கோடி 10 லட்சத்து 47 ஆயிரத்து 700.

லத்தின் அமெரிக்கா: ஒரு கோடி 32 லட்சத்து 37 ஆயிரம்.

ஐரோப்பா: 5 கோடி 9 லட்சத்து 23 ஆயிரத்து 940.

ஆபிரிக்கா: 14 லட்சத்து 95 ஆயிரம்.

ஓசானியா நாடுகள்: 28லட்சத்து 84 ஆயிரத்து 400.

— தகவல்: என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா - 1988. ★

### வார்த்தைகளே இல்லாத தேசிய கீதம்

● உலகிலே மிகவும் பழைமையான தேசிய கீதம் ஜப்பான் நாட்டினுடையது.

கிமாகயோ என்று ஆரம்பமாகும் இத்தேசிய கீதத்தில் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வார்த்தைகள் உள்ளன.

ஜப்பான், ஜோர்தான், சான் மரினோ ஆகிய நாடுகளின் தேசிய கீதங்கள் தலா 4 வரிகள் கொண்டவை.

வார்த்தைகளே இல்லாத தேசியகீதங்கள் 23 நாடுகளில் உள்ளன. இவற்றில் மிகப் பழைமையானது ஸ்பெயின் நாட்டின் தேசியகீதம் ஆகும். 1770 ஆம் ஆண்டில் இது இயற்றப்பட்டது. ★

### பூமிக்கும் செவ்வாய்க்கும் யுத்தமா?

● 'உலகங்களுக்கு இடையேயான யுத்தம்'— என்ற நூலை பிரபல சரித்திரவியலாளர் எச். ஜி. வெல்ஸ் எழுதினார்.

அதில் பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையே யுத்தம் நடைபெறுவதாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ★

## 4,514 பேர் பங்குபற்றிய சங்கீதக் கதிரைப் போட்டி

● 'சங்கீதக் கதிரை'ப் போட்டியில் ஆக மிஞ்சிப் போனால் 10 அல்லது 15 பேர் கலந்து கொள்வர்.

ஆனால் 4 ஆயிரத்து 514 பேர் பங்குபற்றிய சங்கீதக் கதிரைப் போட்டி அமெரிக்காவில் ஒஹியோ பல்கலைக் கழகத்தில் 1982 ஏப்ரலில் இடம் பெற்றது.

இதுவே உலகின் மிகப் பெரிய சங்கீதக் கதிரைப் போட்டி என்று கின்னஸ் சாதனைப் புத்தகம் தெரிவிக்கிறது. ★

## 'மகாபாரதம்' காட்டும் சமூக சீர்திருத்தம்

● இந்தியாவில் தூரதர்ஷனில் 'மகாபாரதம்' தொடர் ஒளிபரப்பப்பட்டு வருவது தெரிந்ததே.

இதனைப் பார்ப்பவர்கள் சிலர் மனமுருகி அசாதாரணமாக நடந்துகொள்வதாகச் செய்திகள் வருகின்றன.

துச்சாதனன் திரௌபதியை அரச சபையில் வைத்து துகிலுரியும் காட்சியைப் பார்த்த ஒருவர் கவலையினால் மயங்கி விழுந்து மரணமானார் என்று செய்தி வந்தது.

இப்போது புதிதாக வந்துள்ள செய்தி இதோ:-

மகாபாரதம் தொடரை ஒழுங்காக பார்த்து வந்த வயோதிப விதவை ஒருத்தி மீண்டும் திருமணம் செய்யப்போவதாக அறிவித்தார்.

கணவர் வேறுயாரும் அல்லர். கிருஷ்ண பரமாத்மாவே.

திருமண வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் குழுமியிருக்க மணமகள் கோலத்தில் வந்த அந்த விதவை கிருஷ்ணர் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். பின்னர் ''நான் அவரின் மனைவியாகிவிட்டேன்''— என்று குழுமியிருந்தவர்களிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் அவர் விதவைக் கோலத்தைக் கைவிட்டு குங்குமம் அணியத் தொடங்கிவிட்டார். அதுமட்டுமல்ல மங்கள காரியங்களையும் முன்னின்று நடத்துகிறாராம்.

சமூக சீர்திருத்தம் இப்படியும் நடைபெறுகிறது. ★

## மகாதேவன் பற்றி ஓர் ஆய்வு அமெரிக்காவில் நடக்கிறது

● ராஜன் மகாதேவன், ஓர் இந்திய மாணவர். வயது 32. மங்களூரைச் சேர்ந்த இவர் அமெரிக்காவின் கான்ஸா மாநிலப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உளவியல் துறை மாணவராக இருக்கிறார்.

இவருக்கு அசாதாரண ஞாபகசக்தி உண்டு. கணித சூத்திரம் ஒன்று தொடர்பான ஞாபகசக்தியின் சாதனைக்காகக் கின்னஸ் புத்தகத்தில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.

இவரது ஞாபகசக்தி பற்றிய சகல அம்சங்களையும் அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். ஒரு லட்சத்து 57 ஆயிரம் டாலர் பணம் இந்த ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

உளவியல், நரம்பு உயிரியல் மற்றும் கம்பியூட்டர் விஞ்ஞானம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு ராஜன் மகாதேவனின் மூளைச் செயற்பாடு உதவும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

ராஜனும் சாதாரண மனிதர் போன்றவர்தான். மைசூர் பொறியியல் கல்லூரியில் இருந்து விலகி உளவியல் படிப்பை மேற்கொண்டிருக்கிறார்.

தனது கார்ச் சாவிகளை வைக்கும் இடத்தை ராஜன் அடிக்கடி மறந்து போய் விடுகிறார் என்று அவரின் அபார ஞாபகசக்தி குறித்து ஆய்வு நடத்தும் பேராசிரியர்கள் கூறுகின்றனர். ★



### நான் தான் ராஜாஜி

● 1938 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி சென்னையில் அகில இந்திய வானொலி நிலையத்தை அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜி திறந்து வைத்துப் பின்வருமாறு பேசினார்:-

''வெகு தூரத்தில் இருந்து பேசுகிறேன். என்னவானாலும் யந்திரம், யந்திரம்தான். ஆகையால் குரலில் இருந்து பேசுகிறவன் யார் என்று சொல்வது உங்களுக்குக் கஷ்டம். நான் தான் ராஜாஜி''- ★

### நல்வாழ்வுக்கு +, —, X, ÷

வாழ்க்கையை கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்து வாழவேண்டும்.

எப்படி என்று எண்ணுகிறீர்களா? அறிஞர் எமர்ஸன் பின்வருமாறு கூறுகிறார்:-

நல்லவற்றைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

தீயவற்றைக் கழித்துக் கொள்ளவேண்டும்.

அன்பைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

இவற்றின் மூலம் வாழ்க்கையை நல்ல முறையில் வகுத்துக் கொள்ளவேண்டும்.

கூட்டி, கழித்து, பெருக்கி வகுத்தால் நல்ல வாழ்வு வாழலாமே!

(எ-4)

### வெளவால்

● இரண்டாம் உலகப் போரின்போது, குண்டுகளை எடுத்துக் கொண்டுபோய், எதிரி தேசத்துக் கட்டடங்களில் போட்டுவர வெளவால்களுக்கு பயிற்சி தரப்பட்டது.

ஆனால், போதிய பயிற்சி அளித்து இதனை செயல்படுத்தும் முன்பே போர் முடிந்துவிட்டது. ★

## ஓஸோன் படல ஓட்டையை அடைக்க வீட்டை விற்று வானம் சென்றவர்!

● சூரியனில் இருந்து வரும் ஊதா ஒளிக்கதிர்கள் (Ultra - Violet Rays) பூமியில் உள்ள ஜீவராசிகள் மற்றும் தாவரங்களை நேரடியாகத் தாக்காது ஒரு போர்வை போல் பூமியைக் காப்பாற்றி வரும் ஓஸோன் படலத்தில் ஓட்டை ஏற்பட்டிருக்கிறது.

பூமியில் இருந்து மேலே செல்லும் நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தைப் பாதுகாக்கும் இப்படலத்தைப் பாதித்துள்ளன.

இதை உலகின் கவனத்திற்குக்கொண்டு வர பிரிட்டனைச் சேர்ந்த போல் லவல் (Paul Lavell) என்பவர் தனது சிநேகிதி மெற்றே லார்சன் என்பவருடன் சேர்ந்து வட துருவத்திற்கு நேர் மேலே ஒரு பலூனில் உயரப் பறந்து சாதனை படைத்தனர்.

இப்பயணத்திற்கான பணத்தைத் திரட்ட திரு. லவல் தனது சொந்த வீட்டையே விற்றார்.

பூமி இருந்தால் தானே வீடு கட்ட முடியும் என்ற எண்ணத்தில் தான் இவர் வீட்டையே விற்றாரோ, என்னவோ! ★

## பிரதமர் வி. பி. சிங் அணியும் தொப்பியின் மர்மம்

● இந்தியாவின் புதிய பிரதமர் திரு. வி. பி. சிங் செம்மறி ஆட்டு ரோமத்திலான தொப்பியைத்தான் முதலில் அணிந்து வந்தார்.

இந்த ஆடுகள் காஷ்மீரில் உள்ள கரஹூல் இனத்தைச் சேர்ந்தவை.



ஆட்டு ரோமத்திலான தொப்பியை அணிவதற்கு சில மிருகவதைத் தடுப்புச் சங்கங்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தன.

இதைத் தொடர்ந்து ஆட்டுரோமத் தொப்பியை அணிவதை திரு. வி. பி. சிங் நிறுத்தி விட்டார்.

இப்போது அவர் அணிந்து இருப்பது செயற்கை ரோமத்திலான தொப்பி ஆகும்.

இந்த விஷயத்தில் பிரதமருக்கு உதவியவர், மத்திய அரசின் அமைச்சராக இருக்கும் திருமதி மேனகா காந்தி.

மேனகா காந்தி மூன்று நிறங்களில் செயற்கை ரோம தொப்பிகளைத் திரு. வி. பி. சிங்குக்கு அனுப்பி இருந்தார். அவற்றில் ஒன்றைத்தான் திரு. சிங் தற்போது அணிந்து வருகிறார்.

திருமதி மேனகா காந்தி மத்திய அரசில் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சராக பணிபுரிவது தெரிந்ததே. ★

### ஏலம் விடுவதில் புதிய வகை

● ஏலம் விடும்போது நம் நாட்டில் குறைந்த விலையில் ஆரம்பித்து அதிகரித்துக் கொண்டே போகிறோம்.

ஆனால் டச்சுநாட்டில் இந்த வழக்கம் இல்லை. உயர்ந்தவிலையில் தொடங்கி குறைத்துக்கொண்டே வருகிறார்கள்.

ஏற்ற விலை வந்ததும் விற்று விடுகிறார்கள். ★

● பிரபல ஆங்கிலக் கவிஞர் ஜோர்ஜ் பைரன் பெரிய குத்துச்சண்டை வீரராகவும் திகழ்ந்தார். ஒரு சமயம் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரரான ஜோன் ஜாக்ஸன் என்பவருடன் மேடையில் மோதி அவரை மண் கௌவச்செய்தார்.

அதுமட்டுமல்ல, பைரன் சிறந்த குதிரைச் சவாரி வீரருங்கூட. ★

### 2000 ஆண்டு கால பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி

● 2 ஆயிரத்து 600 ஆண்டு கால ஜப்பானிய அரச குடும்ப வரலாற்றில் எந்தச் சக்கரவர்த்தியும் நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்படவில்லை.

இருந்தும் சக்கரவர்த்திக்கு வழங்கப்படும் எந்த உணவும் உதவியாளர்களால் ருசி பார்க்கப்பட்ட பின்னரே அவருக்கு வழங்கப்பட்டு வந்தது.

குசினியில் இருந்து எந்த உணவும் மன்னரின் கைக்குப் போகாது.

20 ஆம் நூற்றாண்டு வரை இந்தப் பழக்கம் தொடர்ந்து வந்தது.

ஜப்பானின் புதிய மன்னரான அகிஹிட்டோ இந்தப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

அத்துடன் வைத்திய நிபுணர்களால் தினசரி சோதிக்கப்படுவதையும் மன்னர் அகிஹிட்டோ நிறுத்திவிட்டார். ★

### 1903 இல் சொன்னது

● விண்வெளிப் பயணம் 1903 ஆம் ஆண்டில் பைத்தியக்காரத்தனமான கதை என்று ஒதுக்கப்பட்டது.

ஜேர்மன் விஞ்ஞானி ஹெர்மான் கான்ஸ்வின்ட் 1891 இல் விண்வெளிப் பயணம் பற்றி விரிவுரை நிகழ்த்தி வந்தார்.

இருபதாம் நூற்றாண்டில் விண்ணுக்கு மனிதன் செல்வான் என்று அவர் கூறியிருந்தார். ★

பஞ்சாமிர்தம் பலாரசஅமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை ஒரு போர் இலக்கியமா?

இந்துக்கள், உபநிடதங்...ள், பகவத்கீதை, வேதாந்த ...த்திரம் ஆகிய மூன்றையும் ...ரஸ்தானதிரயம் என ...ழைக்கின்றனர். இவை ...ன்றும் சேர்ந்து இந்துசமய ...த்துவத்தினை விளக்குகின் ...ன என்பர்.

உலகிலுள்ள ஒவ்வொரு ...கத்திற்கும் ஒவ்வொரு நூல் ...னிதமானதாகக் கருதப்படு ...ன்றது. அது அந்தமதத்தின் ...த்துவத்தினை விளக்கிக் கூறு ...ன்றது. இந்துமதம் அநாதி ...ானது போலவே, அதன் ...த்துவமும் சமுத்திரம்போல ...ரிந்தது.

இந்துமத தத்துவம் முழு...வதையும் தன்னகத்தே ...கொண்ட ஒரு தனி நூல் இல்லை! இந்து மத தத்து...வத்தை ஓரளவுக்காயினும் முழுமையாக விளக்கிக் கூறுகின்ற ஒரு நூலைக் குறிப்பிட வேண்டுமாயின், பகவத்கீதைக்கே அந்தப் பெருமை வழங்கப்பட வேண்டும்!

பகவத்கீதை இந்துக்கள் எல்லோராலும் விரும்பிக் கற்கப்படுகின்ற ஒரு நூல். அதற்கு இரண்டு காரணங்கள்.

## வாழ்க்கைத் தத்துவம்

ஒன்று, அது ஒரு முழுமையான வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறுகின்றது.

இரண்டாவது, அது பகவான் கிருஷ்ணரால் அருளப்பட்டது என்ற நம்பிக்கை.

இந்துக்கள் அல்லாதாரையும் கீதை கூறும் வாழ்க்கைத் தத்துவம் கவர்ந்திழுக்கின்றது. அதனாலேயே கீதை உலகிலுள்ள முக்கியமான மொழிகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்து ஒவ்வொருவனும் தனது வாழ்நாளில் பகவத்கீதையை ஒரு முறையேனும் வாசித்தல் வேண்டும். பல முறை கருத்தூன்றிப் படித்தால்தான் அது கூறுகின்ற தத்துவம் சரியாகப் புரியும்.

ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் பயிலும் மாணவர்கள் அதன் சாராம்சத்தை அறிந்து கொண்டால் மேற்கொள்ள வேண்டிய தில்லை. இந்த உலகத்தில் தன் அன்றாடக் கடமைகளைச் செய்து கொண்டு இருக்கும் பொழுதே, ஒருவன் இறைவனுடன் தொடர்பு கொள்ளலாம்.

## கீதை கூறும் யோகநிலை

புலன்களை அடக்கி, விருப்பு வெறுப்புக்கள் அற்ற ஒரு சலனமற்ற நிலையில் மனதை வைத்துக்கொண்டு, செயல் புரிய வல்லவனால் இறைவனைத் தரிசிக்க முடியும். அத்தகைய ஒரு நிலையை யோகநிலை என்கிறது கீதை. அந்தகைய மனோநிலையை அடையும் மார்க்கத்தையும் கீதை கூறுகின்றது.

உலக வாழ்க்கையில் துன்பம் அதிகமாகவும் இன்பம் குறைவாகவும் இருப்பதாகக் காணலாம். உலகில் உள்ளவர்கள் எல்லோரும் துன்பத்தை விலக்கி, இன்பத்தைப் பெருக்கவே விழைகின்றனர். அதற்கான வழியையும் கீதை காட்டுகின்றது. அந்த வழி மேலே கூறப்பட்ட சலனமற்ற மனநிலையை அடைதலாகும்.

இதுவே எமது சைவநாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய 'ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்க' நோக்குகின்ற மனோநிலை.

குரு ஒருவன் மாணவனுக்கு உபதேசிக்கும் பாங்கில் அமைந்துள்ளது பகவத்கீதை. இங்கு உபதேசிப்பவன் கிருஷ்ணன்; கேட்பவன் அருச்சுனன்.

பாரதப்போர் தொடங்குவதற்கு முன்பு, பாண்டவ கௌரவ சேனைகள் குருஷேத்திரப் போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கின்றன. தனக்கு எதிரே நிற்பவர்களைப் பார்த்து அவர்களைக் கொல்ல மனமின்றி, குழப்பமடைந்து, போர்மீது வெறுப்புக் கொண்டு, தனது காண்டீபமாகிய வில்லைக் கீழே எழுந்த வினாக்களேயாகும். இங்கு கிருஷ்ணன் பரமாத்மா. அருச்சுனன் ஜீவாத்மா. துரியோதனாதிகள் - காமம், குரோதம், சோம்பல், மடமை, மறதி, கவலை, துயரம், ஐயம் முதலிய பாவசிந்தனைகள்.

குருஷேத்திரப் போர்க்களம், வாழ்க்கைப் போர்க்களம். ஜீவாத்மா வாழ்க்கைப் போர்க்களத்தில் காமக்குரோதாதிகளுடன்போராடி, அவற்றை வென்றழித்து, பரமாத்மாவைச் சரணடைந்து, அவர் கூறும் வழிச் சென்று, முத்தியடைய வேண்டும் என்பதே கீதை கூறும் செய்தி!

மேலும் அருச்சுனனைப் போர் செய்யத் தூண்டுவதற்காகக் கண்ணன் பகவத்கீதையை உபதேசம் செய்யவில்லை. உயிர் இனத்தின் உயிர் வாழ்க்கைக்கே வழிவகுத்துத் தரும் உண்மைகளை அதில் சொல்கிறார்.

மனிதப் பிறவியின் இரகசியம், மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள பிணைப்பு, இறைவனை இம்மையிலேயே கண்டு அனுபவிக்கும் வழி முறைகள், ஆகியவற்றைப்பற்றியெல்லாம் கண்ணன் விளக்கம் கூறுகிறார்.

கீதை அருச்சுனனுக்காக மட்டும் செய்யப்பட்ட உபதேசமன்று. ஸ்ரீகிருஷ்ணர் தம்முடைய அன்பனான அருச்சுனன் மூலமாக மக்கள் அனைவருக்குமே உண்மையில் பேசுகிறார் என்பதை நாம் நினைவில் இருத்தவேண்டும்! சுருங்கச் சொன்னால் பரமாத்மாவான கிருஷ்ணன் அருச்சுனன் மூலமாகஜீவாத்துமாக்களுக்கு அருளுகின்ற நல்லுபதேசம்தான் கீதை!

அந்த அறிவுரை தனிப்பட்ட நிலைமைக்கு மட்டுமே பொருந்துவதென நாம் எண்ணக் கூடாது. வாழ்க்கையில் அதைப்போன்ற இருதலைக் கொள்ளி நிலையில் உள்ள மக்கள் அனைவருக்கும் இவ்வுரை பொருந்துவதாகும்.

அது, செயலாற்றலே மனிதனது இயல்பு என்று இயம்புவதுடன், மக்கள் வாழ்க்கையில் இவ்வியல்பைப் புறக்கணிக்கின்ற, அல்லது குறைக்கின்ற எந்தக் கொள்கையும் சரியன்று என்று வற்புறுத்துகின்றது. அனைவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச்செய்ய வேண்டும் என்பது கீதையின் அறிவுரை.

சமஸ்கிருதப் பாடலொன்று உபநிடதங்களைப் பசுவிற்கும், கீதையைப் பசுவின் பாலிற்கும், கண்ணனை ஆயனுக்கும், அருச்சுனனை அப்பால் சுரப்பதற்குக் காரணமான கன்றிற்கும், உலகத்தவர்களை அப்பாலினைப் பருகுவோருக்கும் உவமித்துப் பாடுகின்றது.

## பகவத்கீதை கூறும் யோகங்கள்

பேரிதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதத்திலே, பீஷ்மபருவத்தில் அமைந்த பதினெட்டு அதிகாரங்களையும் எழுநூறு (700) சுலோகங்களையும் கொண்டது கீதை. ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு யோகம் எனப்படும்.

பகவத்கீதை முழுவதையும், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், தியானயோகம் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து வைத்துள்ளனர் சில அறிஞர்கள். ஏ. எல். பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் கீதையின் பதினெட்டு யோகங்களையும் விரிவாகப் படித்தல் இயலாது. அவர்கள் அதன் முக்கியமான யோகங்களை மட்டும் படித்தால் போதுமானது.

(பகவத்கீதை கூறும் யோகங்கள் அடுத்த வாரம் பிரசுரமாகும்)

இந்துநாகரிகம்: பகவத்கீதை
ஜி. சி. ஈ. உயர்தர மாணவருக்குரியது

- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -
(பி. ஏ. இலங்கை, கல்வி டிப்ளோமா)




போதுமானது.

பகவத்கீதைக்கும் ஊற்றுக்கண்கள் உபநிடதங்களே. உபநிடதங்களில் கூறப்படுகின்ற தத்துவக் கருத்துக்களைப் பகவத்கீதை மேலும் விளக்கிக் கூறுகின்றது.

பரமாத்மா, ஜீவாத்துமா, உலகம் ஆகியவற்றின் சிறப்பியல்புகளையும் தொடர்புகளையும் விளக்குவதுடன் உபநிடதங்கள் நின்று விடுகின்றன. இவை ஆழமான கருத்துக்களாயினும் நடைமுறை வாழ்க்கையுடன் அதிகம் தொடர்பு கொள்ளாத, கருத்து முதல் வாதங்களாகவே அமைந்துவிடுகின்றன.

ஆனால் பகவத்கீதை பிரமம், ஆன்மா, உலகம் ஆகியவற்றின் இயல்பையும் விளக்கி அதற்கும் ஒருபடி மேலே சென்று, உபநிடதங்கள் கூறும் தத்துவக் கருத்துக்களை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி, ஆன்ம விடுதலைக்கான வழியையும் காட்டுகின்றது.

ஆன்மா இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்கிறது கீதை. அது மரணத்திற்குப் பின்பு மட்டுமே சாத்தியமாகிற ஒரு நிகழ்ச்சியல்ல. இந்த உலகத்திலேயே செய்யக் கூடிய ஒன்று.

அதற்காக ஒருவன் உலகத்தைத் துறந்து, சந்நியாசம் போடுகிறான், அருச்சுனன்.

அப்பொழுது அவனுக்குத் தேர்ச்சாரதியாக இருந்த கிருஷ்ணபரமாத்மா, அப்படிக் கோழையாகிவிட்ட அருச்சுனனுக்குப் பகவத்கீதையை உபதேசிக்கிறார் அதே இடத்தில்.

இத்தகைய ஒரு சிறந்த ஆன்மீக போதனை ஒரு போர்க்களத்தில் நிகழ்த்தப்படுவது எப்படிப் பொருத்தமுடையதாகும்? என்ற வினாவைப் பலர் எழுப்பியுள்ளனர். கீதையில் பல இடங்களில் 'அர்ச்சுனா போரிடு! போரிடு!' என்று பகவான் கூறுகிறார்.

## போர் இலக்கியமா?

இந்த இரண்டு காரணங்களையும் கொண்டு பலர், பகவத்கீதை ஒரு போர் இலக்கியம் என்றும் கூறத்துணிந்துள்ளனர். மகாபாரதத்தில் பல இடைச் செருகல்கள் உள்ளன என்பதை அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

'பகவத்கீதையும் அப்படி ஒரு இடைச் செருகல்தான். அது மகாபாரதக்கதையுடன் இயைபுறாமல் நிற்கிறது' என்றும் பலமேனாட்டு அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவையெல்லாம் கீதையின் உட்பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையினால்

# குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து உணவு அவசியம்

ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தையும் குழந்தைகள் வளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் பொறுத்தே அந்நாட்டின் முன்னேற்றம் அமையும்.

ஆரோக்கியமான உடல் நிலையைப் பெற முதல் தேவை சத்தான உணவு வகைகளேயாகும்.

சத்துணவு பற்றிய பொதுவான அறிவு நம் நாட்டு மக்களிடம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே தான் சத்துக்குறை நோய்களும் (Marlutrition) பற்றாக்குறை நோய்களும் (under - Nutrition) மிக அதிக அளவில் உள்ளது.

மேலும் தொற்று நோயும் சத்துணவுக் குறையும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை.

ஏனெனில், ஊட்டச்சத்துக் குறைவினால் வியாதியை எதிர்க்கும் தன்மை குறைகிறது.

ஆனால், ஊட்டமுள்ள குழந்தைகளைத் தொற்று நோய்கள் எளிதில் தாக்குவதில்லை. ஐந்து வயதுக் குழந்தை சாதாரணமாக 18. 5 கிலோ எடை இருக்க வேண்டும்.

குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்குப்புரதம் (Protein) கள் போஹைட்ரேட் (Carbohydrate) அதிகம் தேவை.

மேலும் எலும்பு வளர்ச்சிக்கும் இரத்த விருத்திக்கும் கல்சியம், இரும்புச் சத்துக்கள் நிறைந்த உணவு கொடுக்கப்படுதல் அவசியம்.

வியாதிகளில் இருந்து தடுப்புச்சக்தி பெற வைட்டமின் சி, பி, டி ஆகியவையும், நல்ல கண்பார்வைக்கு வைட்டமின் 'ஏ' அடங்கிய உணவுப் பொருள்களும் கண்டிப்பாக அளிக்கப்படுதல் வேண்டும்.

3 வயதுக் குழந்தைக்கு ஒரு நாளைக்கு 1200 கலோரி சக்தி தேவை.

இதற்கு நாள் ஒன்றுக்கு 20 கிராம் புரதம், 400 – 500 மில்லிகிராம் கல்சியம், 15–20 மில்லிகிராம் இரும்புச்சத்து, 250 மில்லிகிராம் வைட்டமின் 'ஏ', 200 மில்லிகிராம் விட்டமின் 'சி', 8 மில்லிகிராம் வைட்டமின் 'பி' சத்துக்கள் அடங்கிய உணவுகள் அளிக்கப்படுதல் வேண்டும்.

மேற்கூறிய சத்துக்களைப் பெற ஒரு நாளைக்கு தானிய வகை 150 கிராம், பருப்பு வகை 50 கிராம், கீரைவகை 50 கிராம் காய்கறி - கிழங்குகள் 30 கிராம், பழங்கள் 50 கிராம், எண்ணெய் 20 கிராம் (அசைவாக இருந்தால் மாமிசம், மீன், முட்டை 30 கிராம்), சர்க்கரை 30கிராம் ஆகியவரை கொடுக்கப்படவேண்டும்.


குழந்தைகளின் உணவில் கீரை, காய்கறி, பழங்கள் ஆகியவை அதிகமாக இடம் பெறவேண்டும்.

உதாரணமாகக் கிராமங்களில் எளிதில் கிடைக்கக் கூடிய முருங்கைக் கீரை, பசளிக்கீரை கொய்யாப்பழம், வாழைப்பழம் ஆகியவற்றைக் கொடுக்கலாம்.

குழந்தைகளுக்குக் காரம் மிகுந்த, எண்ணெயில் பொரித்த அல்லது வறுக்கப்பட்ட உணவுகள், அளவுக்கு அதிகமான இனிப்புப்பண்டங்கள், காபி, தேநீர் ஆகியவற்றை அதிகமாகக் கொடுக்கக்கூடாது.

எனவே, குழந்தைகள் நல்ல ஆரோக்கியமான உடல் வளர்ச்சி பெறவும், அறிவு வளர்ச்சிக்கும் சத்தான, ஊட்டமான உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டும். (எ– 4)

## கல்யாணக் கோலம்!



இக்கோலத்தினை கல்யாணக்கோலம் என்று சொல்வர்.

எனினும் பொதுவாக எந்த வைபவத்திற்கும் போடலாம்.

இதனை மாக்கோலமாகவோ வர்ணம் சேர்த்தோ போட்டுக் கொள்ளலாம்.

வர்ணம் சேர்த்துப் போடுவதானால் பூவின் நடுவட்டத்திற்கு சிவப்பு நிறமும் பூவின் இதழ்களுக்கு மஞ்சள் நிறமாகவும் கொடுக்கலாம்.

பெட்டி போன்ற பகுதிக்கு வெள்ளை நிறமாகவும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்கும், பூவின் வெளிப்புறத்திற்கும் பச்சை நிறமாகவும் வர்ணம் சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம்.

விரும்பினால் நடுவே குத்துவிளக்கு வைத்து மற்றைய பெட்டி போன்ற பகுதிக்கு மேல் சிட்டி விளக்குகளும் வைக்கலாம்.

— திருமதி நா. சோமசுந்தரக்குருக்கள்

# வாழ்க்கையில் வெற்றி பெற மணமக்களுக்கு ஆலோசனை!

★ மணமானுக்கு நேற்று வரை இரு கண்கள். இனி அது கூடாது. நாளையில் இருந்து மணமகளின் இரு கண்களையும் பயன்படுத்தி உற்றார், உறவினர்களையும் உலகத்தையும் நான்கு கண்களால் பார்த்து வாழ்வைத் தொடங்க வேண்டும்.



மணமகளுக்கு நேற்றுவரை இரு காதுகள். இனி அது போதாது. நாளையில் இருந்து மணமகனின் இரு காதுகளையும் பயன்படுத்திக் கொண்டு, நான்கு காதுகளால் உற்றார், உறவினர்களின் செய்திகளையும், உலகின் செய்திகளையும் கேட்டு வாழ்க்கையை நடத்தியாக வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றிபெற இவ்விரண்டும் மட்டும் போதாது.

மணமகனும் மணமகளும் தங்களின் வாய்கள் இரண்டையும் நான்காகப் பெருக்கிக் கொள்ளாமலும், இரண்டாக வைத்துக்கொள்ளாமலும் ஒன்றாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

அப்பொழுதுதான் வாழ்வில் வெற்றி பெறமுடியும்.

-கி. ஆ. பெ. விசுவநாதம்

## பொன்மொழி

★ தேவையற்ற சாமான்களை வாங்கும் வழக்கமானது– முடிவில் தேவையுள்ள சாமான்களை விற்கும் நிலையில் கொண்டு வந்துவிடும்.

—ரஸ்கின்




# தீச்சுடர் மேல்நோக்கி எழும்புவது ஏன்?

மெழுகுவர்த்தி, நெருப்புக்குச்சி அல்லது விறகு எரியும்போது தீச்சுடர் மேல் நோக்கி எழும்புவதைக் காண்கிறோம். தீ எப்போதும் கீழ் நோக்கி எரிவதில்லை. இது ஏன் என்பது தெரியுமா...?

இந்த சிறப்புத் தன்மையை இவ்வாறு விளக்கலாம். விறகு, நெருப்புக்குச்சி, மெழுகுவர்த்தி போன்ற எரிபொருள்களில் கார்பனும், ஹைட்ரஜனும் அடங்கியுள்ளது.

இவை எரியும் போது கார்பன் காற்றிலுள்ள ஒக்ஸிஜனுடன் சேர்ந்து கார்பன்டை ஒக்ஸைடு ஆகிறது. அதே போல ஹைட்ரஜனும், ஒக்ஸிஜனும் சேர்ந்து தண்ணீராகிறது. கூடவே இன்னும் சில வாயுக்களும் உண்டாகின்றன.

எரிதல் நிகழ்ச்சியின் பயனாக இப்பொருட்கள் ஒளியையும், வெப்பத்தையும் உண்டுபண்ணுகின்றன. எரியும் வாயுக்களே தீச்சுடராகக் காட்சியளிக்கின்றன.

எரியும்போது உண்டாகும் வாயுக்கள் ... கனம் குறைந்தவை. அதனால்தான் தீச்சுடர் மேலெழும்புகிறது.

வாயிலிருந்து காற்றை தீச்சுடர் மீது ஊதினால் அதில் அது அசைந்தாடுவதைக் காணலாம். எரியும் வாயுக்கள் காற்றினால் பாதிக்கப்படுவதால் தீச்சுடரும் பாதிக்கப்படுகிறது. இம்மாதிரியான பாதிப்புகள் இல்லாத நேரத்தில் தீச்சுடர் நின்று எரிவதைக் காண்கிறோம்.

தீச்சுடரில் ஒளி தருவது, ஒளி தராதது என இருவகை உண்டு. மெழுகுவர்த்தியும், விறகும் எரியும்போது எழும்பும் தீச்சுடர் ஒளிதரவல்லது. ஹைட்ரஜன் வாயுவினால் உண்டாகும் தீச்சுடர் ஒளி தராது. ★




# மௌனத்தின் மதிப்பு!

ஒரு ஜமீன்தார் முன் கோபி. எப்போதும் சளசளவென்று பேசிக்கொண்டே இருப்பார். அவர் பேசும் போது யாரும் குறுக்கிடத் துணிந்ததே இல்லை.

ஒரு நாள் ஜமீன்தார் தனியாகக் கிளம்பி உலாவச் சென்றார். அந்த ஊரின் அருகே ஒரு மலை இருந்தது. அவர் அதன் மீது ஏறிப் பார்க்க விரும்பினார்.

மலை அடிவாரத்தில் ஆடு மேய்ப்பவன் ஒருவன் தென்படவே அவனைத் தன்னோடு வரச்சொல்லி அவர் மலை மீது ஏறலானார்.

ஆடு மேய்ப்பவன் எதுவும் பேசாமல் செல்ல ஜமீன்தார் அவனிடம் ஏதோ உரத்த குரலில் சொல்லிக்கொண்டே அந்த மலைமீது ஏறலானார்.

அவர் சிறிது தூரம் சென்றதும் களைத்துப் போய் உட்கார்ந்துவிட்டார். ஆடு மேய்ப்பவனோ,

''மலைமீது ஏறுபவன் மௌனமாகச் செல்லவேண்டும். அப்போதுதான் களைத்துப் போகாமல் விரைவில் மலைமீது ஏறி உச்சியை அடைய முடியும்'' என்றான்.

மலை மீது மட்டுமல்ல, வாழ்க்கையிலும் உயர்ந்து கொண்டே போகவேண்டுமானாலும் அதிகமாகப் பேசக் கூடாது என்ற விஷயத்தை ஜமீன்தார் புரிந்துகொண்டார்.

அதற்குப் பின் அவர் மௌனத்தின் மதிப்பை உணர்ந்து பேசலானார். ★

## அறிவியல் வினா - விடை

கொளுத்தும் வெய்யிலிலும் மரத்தின் இலைகள் சூடாவதில்லை.

இது ஏன்?

கொளுத்தும் வெய்யிலிலும் மரத்தின் இலைகள் சூடாவதில்லை. இதற்குக் காரணம் இலையின் மேல் படும் சூரிய ஒளியின் ஒரு பகுதி ஒளிச்சேர்க்கைக்கு உதவுகிறது. மற்றொரு பகுதி ஆவியாக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரையில் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு ஆட்சியில் உள்ளோர் தீர்வு காண வேண்டும்!

'சங்கராபரணம்' படம் மூலம் திரையுலகப் புகழ் பெற்ற இயக்குநர் கே. விஸ்வநாத்.

தெலுங்கு மூலம் தமிழுக்கு வந்த இவர் தற்போது இந்திப்படவுலகிலும் கால் வைத்திருக்கிறார்.

படவுலகில் பத்து லட்சத்தில் ஒருவராக இவர் திகழ்கிறார்.

இவரின் பல தெலுங்குப் படங்கள் இந்தியிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவரின் பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

**- 'சங்கராபரணம்' இயக்குனர் விஸ்வநாத் கூறுகிறார் -**

● படத்தயாரிப்பாளராக இருக்கிறீர்கள். பின்னர் ஏன் பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்கத் தயக்கம் காட்டுகிறீர்கள்?

பதில்: நீங்கள் ஓரளவு சரி. தொழில்நுட்பவியலாளர்களுக்குப் பேட்டியும் பிரபலமும் தேவையற்றவை.

நடிகர், நடிகையரை வர்ணிப்பது போல் தொழில் நுட்ப வசதிகளைப் பற்றிய வர்ணனைகள் பிரயோசனத்தைத் தரா.

நான் எடுத்துள்ள ஒவ்வொரு படமும் நான் அளித்துள்ள பேட்டிகளே.

இப்படங்களின் ஒவ்வொரு பிரேமிலும் என்னைக் காணலாம்.

எனது திறமை, தொழில் நுட்ப வல்லமை முதலியவற்றைத் திரையில் பார்த்துத் தான் மதிப்பிட வேண்டும்.

● தொழில்நுட்பவியலாளர் என்ற முறையில், உங்களின் திறமை அவ்வளவாக புகழப்படுவதில்லையே!

பதில்: அப்படி ஒரு நிலை படவுலகில் காணப்படுகிறது. இதற்கு நான் என்ன செய்ய முடியும்?

தென் இந்தியாவில் ஒரு படத்தைத் தயாரிக்கத் துவங்கும் முன் இயக்குநர் யார் என்பது தீர்மானிக்கப்படுகிறது. பின்னர்தான் கதை பற்றி முடிவு செய்யப்படுகிறது. பின்னர் இயக்குநர் பாத்திரங்களுக்கு ஏற்ற நடிகர், நடிகையரைத் தெரிவு செய்கிறார்.

இந்திப்படவுலகில் படம் தயாரிக்கும் முறையே வித்தியாசமானது. முதலில் நடிக - நடிகையர் தீர்மானிக்கப்படுகின்றனர். அதன் பின்னர் இயக்குநர் என்பது நிச்சயிக்கப்படுகிறது. கடைசியில் தான் கதை முடிவு செய்யப்படுகிறது.

● இது ஓர் ஆரோக்கியமான நிலை என்று கருதுகிறீர்களா?

பதில்: இயக்குநருக்கு இந்த விஷயத்தில் கருத்து வெளியிடும் சுதந்திரம் இல்லை.

ஹிந்தி உலகில் கதாநாயகர்களின் பெயரைச் சொல்லித் தான் தயாரிப்பாளர்கள் தங்கள் படத்தை விற்கிறார்கள்.

தென் இந்தியாவில் - இயக்குநரின் பெயரைக் கூறித் தான் படம் விற்கப்படுகிறது. தென் இந்தியாவில் தொழில் நுட்பவியலாளரும் மதிக்கப்படுகிறார்கள்.

இந்தியிலும் இந்த நிலை காலக்கிரமத்தில் ஏற்படக் கூடும்; ஆனால் விரைவில் ஏற்படாது.

சங்கீதத்தை நான் முறைப்படி கற்றவன் அல்லன். அருங்கலைகளில் எனக்கு ஆர்வம் உண்டு.

● சிறிய நாடுகளான இத்தாலியும் ஜேர்மனியும் சர்வதேச ரீதியில் சினிமாத் துறையில் வளர்ச்சி அடைந்துள்ளன. நீங்களும் ஆங்கிலத்தில் படங்களைத் தயாரித்து இந்திய சினிமாவுக்கு சர்வதேச புகழைப் பெற்றுக் கொடுக்கக் கூடாதா?

பதில்: நல்லது. அது ஒரு முற்றும் வித்தியாசமான ரசனை, சிந்தனை. ஆங்கிலேயரின் கலாசாரத்தைப் புரிந்து கொள்வது எமக்குக் கஷ்டமான காரியமாக இருக்காது. ஆனால் அவர்களுக்கு அப்படி இருக்காது.

படத்தின் கதையும் அதை எடுக்கும் முறையும் சர்வதேச ரீதியில் புரிந்து, ரசிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

தொழில்நுட்பத் துறையில் நாம் பின்னிற்கவில்லை. ஆனால் அவர்களின் தரமான படத்தயாரிப்புக்குத் தேவையான வளங்கள் எம்மிடம் குறைவாகவே உள்ளன.

ஆங்கிலத்தில் படம் தயாரிக்கும் எண்ணம் எனக்கில்லை.

● கலைப்படங்கள் பற்றி ........

பதில்: அது எனக்கு உடன்பாடானதல்ல. தெரிவு செய்யப்பட்ட கொஞ்சப் பேர் பார்ப்பதற்கு படம் தயாரிப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

நான் அனுப்பும் செய்திகள் கிராமங்கள் வரை செல்ல வேண்டும்; சாதாரண மக்களின் உள்ளங்களைத் துளைத்துக் கொண்டு அவை செல்ல வேண்டும்.

● அப்படியானால் சினிமா பற்றி உங்களின் நோக்கம் தான் என்ன?

பதில்: இரண்டிற்கும் இடையில் ஒன்றை அடையவே நான் முயற்சிக்கின்றேன். படம் தயாரிப்பதில் ஏதாவது ஒரு நோக்கம் இருக்க வேண்டும், படம் முழுவதும் பொழுது போக்கானதாகவும் இருக்கக் கூடாது; அது படித்தவர்களுக்கு மட்டும் என்பதாகவும் இருக்கக் கூடாது. சமூக விழிப்புணர்வுக்குப் படத்தயாரிப்பில் இடம்கொடுக்க வேண்டும்.

படத்தில் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்குப் படத்திலேயே தீர்வும் கூற வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும்.

படத்தில் நாம் எழுப்பும் பிரச்சினைகளுக்கும் ஆட்சியில் இருப்போர்தான் தீர்வு காண வேண்டும்.

படத்தயாரிப்பாளர்கள் கண்ணாடி போன்றவர்கள். எமது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளைத் தயாரிப்பாளர்கள் படத்தில் பிரதிபலிக்கிறார்கள்.

படத்தயாரிப்புப் பற்றிய என் எண்ணத்தை வார்த்தைகளில் கூறுவது கஷ்டம்.

என் படங்களை நீங்கள் பாருங்கள்; அப்போது என்னை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

● படம் தயாரிப்பது குறித்து எப்படி திட்டமிடுகிறீர்கள்?

பதில்: இன்னொருவர் எழுதிய திரைக்கதை வசனத்தை வைத்து நான் படம் டைரக்ட் செய்வதில்லை

நான் எடுக்கும் படத்திற்கு நானே முழுப்பொறுப்பாக இருக்க விரும்புகின்றேன்.

ஆண்டு ஒன்றுக்கு ஒரு படம் தான் எடுப்பேன்.

நான் முதலில் கதையைத் தெரிவு செய்கிறேன். பின்னர் வசனம் எழுதுகிறேன். அதன் பின்னர் தயாரிப்பில் ஈடுபடுகிறேன்.

முழு வசனங்களையும் எழுதி, அப்படியே பயன்படுத்துவேன். இதுதான் நான் படம் தயாரிக்கும் முறை.

● சினிமா பற்றிய ......

பதில்: சினிமா, இயக்குநருக்கு உரியது. கதைவசனம், இசை, எடிட்டிங் ஆகிய தனித் தனி என்றாலும் ஒருங்கிணைந்தே செல்ல வேண்டும். ஒரு துறை இன்னோர் துறை மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. ஆனால் இயக்குநரின் ஆலோசனையுடன் சகல துறைகளும் செயல்படவேண்டும். ஒரு படத்தின் வெற்றியோ தோல்வியோ இயக்குநரைத் தான் சாரும்.

வெள்ளித்திரையில்

## புதுக்கவிதை பற்றி 'பத்மஸ்ரீ' கமல்

மனிதனுக்கு காது, கண்கள், வாய், மூளை என்று இருப்பது போல திரைப் படத்தை உருவாக்குவதிலும் வெவ்வேறு டெக்னீஷியன்களின் பங்கு அவசியமாகின்றது.

ஒரு சாதாரண கதையைக் கூட நல்ல டெக்னீஷியன்கள் தூக்கி நிறுத்தமுடியும்.

ஆனால் ஒரு நல்ல கதையை மோசமான டெக்னீஷியன்



களால் தூக்கிவிடமுடியாது.

புதுக்கவிதை எனக்குப் பிடிக்கும். மரபை மீற வேண்டும் என்ற காரணம் அல்ல. மரபு தெரியாததால் யதேச்சையாக நடக்கிற விஷயம் இது.

புதுக்கவிதையில் விரசம் குறைகிறது. பளிச் என்று விஷயம் புரிகிறது. எனவே அதன் மீது காதல் அதிகம்.

—'பத்மஸ்ரீ' பட்டம்பெற்ற பின்னர் தமிழ் நடிகர் கமலஹாஸன் பேட்டி ஒன்றில் தெரிவித்த கருத்துக்கள் இவை. ★


★ நம்பிக்கை
★ நாணயத்தின்
★ சின்னம் ⟹ ஷப்ரா

நிலையான முதலீடுகள்
கீழ்க்கண்ட வட்டி வீதங்களில் வரவேற்கப்படுகின்றன.

3 வருடங்கள் 24%
2 வருடங்கள் 23%
1 வருடம் 20%

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5.485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,385 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1 791, 516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,718 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| " செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,878 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

பணிப்பாளர் சபை:

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களுக்கு:-

**ஷப்ரா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலை பேசி இல. 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்லுண்டாய் உப்பளத்தில் இறால் வளர்ப்பு
## உப்பு உற்பத்தியுடன் இடம்பெறும் வாய்ப்பு

நீண்ட காலத்திற்குப் பின்னர் வட பிராந்தியத்தில் உப்பு உற்பத்தி தீவிரப்படுத்தப்படுகிறது.

இது பற்றிய விவரங்களை தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆனையிறவு உப்பள உற்பத்தி முகாமையாளர் திரு.கே. தங்கராஜா இங்கு தருகின்றார்.

பேட்டி: எஸ். ஜி.

**- கே. தங்கராஜா -**
(தேசிய உப்புக் கூட்டுத்தாபன ஆனையிறவு உற்பத்தி முகாமையாளர்)

வட பிராந்தியத்தில் உள்ள உப்பளங்களில் 1990 ஆம் ஆண்டுக்கான உற்பத்தி வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

வட பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை இதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றார்.

வட பிராந்தியத்தின் மிகப் பெரிய உப்பளங்களான ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு ஆகியனவற்றில் கடந்த சில ஆண்டுகளாக நாட்டு நிலைமை, யந்திர சாதனை பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தன.

60 ஆயிரம் உப்பு உற்பத்தி செய்யப்படவேண்டிய இடத்தில் 40 ஆயிரம் தொன் உப்பு மட்டுமே 1989 இல் உற்பத்தியானது.

இது உப்பு உற்பத்தியில் 33 சதவீத விழ்ச்சியைக் காட்டினாலும், வட பிராந்திய உப்பளங்கள் லாபத்தில்தான் இயங்கியது.

அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்புடன், வட பிராந்தியத்தில் உற்பத்தி செய்யும் உப்பும் உள்நாட்டுப் பாவனைக்குப் போதுமானதாக இருக்கிறது.

வருடத்திற்கு வட பிராந்தியத்தில் 60 ஆயிரம் தொன் உப்பு உற்பத்தியானால் 20 ஆயிரம் தொன்னை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

1980 முதல் 1985 வரை சுமார் ஒரு லட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக ஆபிரிக்கா, பங்களாதேஷ், மாலைதீவு, மொம்பாஸா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

நாட்டு நிலைமை காரணமாக உற்பத்தி குறைந்ததைத் தொடர்ந்து 1985 முதல் இந்த ஏற்றுமதி நிறுத்தப்பட்டது.

இலங்கையில் ஆனையிறவு உப்பளத்தில் இருந்து மட்டுமே உப்பு ஏற்றுமதி செய்யக்கூடியதாக துறைமுகம் அருகில் அமைந்துள்ளது.

### குறிஞ்சாத்தீவு உப்பளம்

குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் சில பகுதிகள் பாதுகாப்புக் காரணமாக உப்பு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படவில்லை. இவ்வருடம் கூடிய பகுதிகளை உற்பத்திக்கு விடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிஞ்சாத்தீவில் டீஸலில் இயங்கிவந்த யந்திரங்கள், பம்புகள் மின்சாரமயமாக்கப்படுவதற்குத் திட்டங்களை வகுக்கும்படி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை பணித்திருக்கிறார்.

நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு மின்சாரம் கொண்டு சென்று மின்மாற்றிகளை அமைக்க ஒரு கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### கொழும்பில் மாநாடு

கடந்த வருடம் உலக வங்கி உப்பள அபிவிருத்திக்கு சுமார் பத்துக்கோடி ரூபா செலவிட முன்வந்தது. ஆனால் அது சாத்தியப்படவில்லை.

அண்மையில் கொழும்பில் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அகஸ்டின் டயஸ் தலைமையில் உப்பு உற்பத்தி பற்றி மாநாடு ஒன்று நடந்தது.

உப்புக் கூட்டுத் தாபன வட பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, உற்பத்தி முகாமையாளர் திரு. கே. தங்கராஜா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

புதிய இயந்திரங்கள் பெற்றுத் தருவதாகக் கூட்டுத்தாபனத் தலைவர், வட பிராந்திய முகாமையாளருக்கு உறுதி அளித்தார்.

### கல்லுண்டாய் உப்பளம்

இந்த உப்பளத்தில் உள்ள குளங்களில் நவீன முறையினால் இறால் வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தத் தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிலர் பிராந்திய முகாமையாளர் திரு. எஸ் வேலாயுதபிள்ளையுடன் சென்று இடங்களைப் பார்வையிட்டனர். இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள அநேகருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். உப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் பெரும் லாபமும் கிடைக்கும்.

### செம்மணி உப்பளம்

சில ஆண்டுகளாக இங்கு உப்பு உற்பத்தி செய்யப்படவில்லை.

1989 இல் இயந்திர சாதனங்களின் உதவியால் 450 தொன் உற்பத்தி செய்யப்பட்டது.

இது பெரிய சாதனையாகக் கருதப்பட்டது.

### அரைத்த - கழுவிய உப்பு

வட பகுதி மீன் பிடியாளருக்கு அரைத்த உப்பு குறைந்த செலவில் அரைத்து கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்படுகிறது.

கழுவிய உப்பு பாவனையாளர் நலன் கருதி ஒரு கிலோ பக்கட்டுக்களில் விநியோகிக்கப்படுகின்றது.

மின்சாரம் தடைப்பட்டாலும் கழுவிய உப்பு உற்பத்தியைத் தொடருவதற்காக ஒரு ஜெனரேட்டர் பெறப்பட்டு உள்ளது.

---

குறுங்கதை

# 'விடியோ' சாட்சியாக...

**வேலணையூர்**
**- கே. ஆனந்தன் -**

"மகனே...! உனக்கு வயசு போய்க்கொண்டு இருக்கிறது. அதை நினைத்துப் பார்க்காமல் இயந்திரத்தோடு இயந்திரமாக இயங்குகிறாயே..! என் காலம் இன்னும் எத்தனை நாட்கள்...? நினைத்துப் பார் உன் தங்கையை... உன் காரியம் முடிந்தால் தங்கையின் அலுவல் தானாக நிகழ்ந்து விடும். நம்ம புறோக்கர் ஒரு நல்ல சம்பந்தம் பேசிக் கொண்டு வந்திருக்கிறார். எதற்கும் உன் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்''.

கனடாவில் வசிக்கும் சுந்தர் தன் தாயாரின் கடிதத்தைப் பல தடவைகள் படித்தான். ஒரு முடிவுக்கு வந்து சம்மதம் தெரிவித்து கடிதம் எழுதினான்.

சுந்தர் தாயகம் திரும்பினான். திருமணம இனிதே நிறைவேறியது.

திருமண களேபரத்தில் மணப்பெண்ணின் தங்கஒட்டியாணம் காணாமற் போய் விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. என்ன செய்வது! அனைவரும் ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக்கொண்டனர்.

திருமண நாளின் நான்காம் நாள் கொண்டாட்டம். நினைவுகளை மீட்குமாற் போல திருமண விழாவின் காட்சிகளை எல்லாம் படம் பிடித்த அந்த 'விடியோ' நாடா ரி. வி. யில் ஒளிபரப்பாகிறது.

இதனைக் கண்டுகளிக்க சுற்றமும் சூழலும் சூழ்ந்து கொண்டனர். மணமகனை நோக்கி மணமகள் கால் பார்த்து நடந்துவரும் காட்சியைக் கவனமாக இரசித்துக் கொண்டு இருந்தார்கள்...

ஒரு கட்டம்.........

மணமகளின் ஒட்டியாணம் மெல்ல நழுவிக் கீழே விழுகிறது. பக்கத்துவீட்டுப் பார்வதி மெதுவாக எடுத்துத் தன் முந்தானையில் முடிந்து கொண்டு அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு நழுவி விடுகிறாள்.

விடியோ பார்த்துக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஒரு பரபரப்பு. அனைவரும் பார்வதி அக்காவைத் தேடினார்கள்.

பார்வதி இருந்த இடத்தில் வெறும் நாற்காலிதான் இருந்தது. திடீரென வேகமாக ஓடிவந்த பார்வதி அக்கா, சுந்தரை நோக்கி,

''தம்பி சுந்தர்...! நான் இதை அண்டைக்கே தரவேணும் என்று நினைத்தேன். மறந்துபோய்விட்டேன். இப்ப இந்த விடியோ பார்த்தவுடன்தான் ஞாபகம் வந்துகொண்டுவந்தனான்''—

—இப்படிக் கூறியபடி ஒட்டியாணத்தை சுந்தரிடம் கொடுத்தாள் பார்வதி அக்கா. ★

---

# இயற்கை வளங்களைப் பேண இஸ்லாம் கூறும் வழி!

**- அத்தாஸ் றூமி (மாத்தறை) -**

இன்றைய நாகரீக உலகில் மனித இனத்திற்கே பெரும் அழிவுச் சவாலை ஏற்படுத்தி, மனிதனையே அழித்துவிடும் பல பிரச்சினைகள் தோன்றி விட்டன. அதில் மிகவும் முக்கியமான பிரச்சினை சுற்றாடல்-சூழல் மாசுபடுவது.

மனிதன் தானாகவே இப்பிரச்சினையை விலைக்கு வாங்கிவிட்டான். தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் இருந்த இப் புவியை அசுத்தமாக்கியதன் பலனாக, இன்று நாம் பாரிய ஆபத்துக்களை எதிர் நோக்குகிறோம்.

சுற்றாடல் பிரச்சினைக்கு இஸ்லாம் ஏற்கனவே பரிகாரம் கூறிவிட்டது. 1400 ஆண்டுகளுக்கு முன்பே ''மரத்தை நடுவதின் மேன்மையை, தீர்க்கதரிசியான முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அன்றே கூறிவிட்டார்கள்.

### அடிப்படைத்தேவை

சுற்றாடலில் உள்ள நீர், வளி, மண் என்பன உயிருள்ள அங்கிகளின் அடிப்படைத் தேவைகளாகும். விலங்கு, தாவரம் எவையானாலும் சரி இவைகளின் வாழ்வுடன் நீர் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையாகக் காணப்படுகின்றது.

அல்குர் ஆன் பின்வருமாறு கூறுகின்றது:- உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம் '' [21 : 30]

மேலும் அல்குர் ஆனின் வேறு ஓர் இடத்கில்:- ஜீவப் பிராணிகள் ஒவ்வொன்றையும் அல்லாஹ் நீரைக்கொண்டே படைத்திருக்கிறான் [24 : 25]

இன்று எங்கு பார்த்தாலும் ''காட்டை அழிக்காதீர்கள்''

''மரங்களை அதிகமாக நாட்டுங்கள்'', ''மரங்களை மீள நாட்டுங்கள்'' என்று அறைகூவல் விடுக்கப்படுகின்றது.

ஆனால் இஸ்லாம் காடுகளுச்கும், மரங்களுக்கும் ஏற்கனவே முக்கியத்துவம் அளித்து விட்டது. இதைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மரங்களையும், காடுகளையும் கொண்ட டமஸ்கஸ் நகரை ''சுவர்க்கத்தின் தோட்டம்'' என வர்ணித்துள்ளார்கள்.

மேலும் யூப்பிரட்டிஸ், டைக்கிறிஸ் நதிகளை ''சுவனத்து நதிகள்'' என இஸ்லாம் கூறியதைக் கொண்டு இதன் முக்கியத்துவத்தை அறிந்து விடலாம்.

காடுகள், மரங்கள் ஆகியவற்றின் காரணத்தால் சுற்றாடல் மிகவும் தூய்மை பெற்றுக் காணப்படுகிறது. மண்ணரிப்பு தடுக்கப்படுகின்றது. வேகமாகத் தரையை நோக்கி விழும் மழைத் துளிகளின் வேகம் தணிக்கப்படுகிறது.

### தர்மமான செயல்

இஸ்லாம் ஒரு மரத்தை நாட்டுவதைத் ''தர்மமான செயல்'' என்று அறிவித்து விட்டது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்:- ''ஒரு முஸ்லீம் ஒரு செடியை நாட்டி, ஒருவிதையை விதைத்து அதன் பலனை ஒரு மனிதன், ஒரு பறவை, ஒரு நான்கு கால் மிருகம் சாப்பிட்டால் அது அவனுக்கு தர்மமாகி விடும்'' என்று கூறினார்.

இன்று மரத்தை, காடுகளை வெட்டுபவர்களுக்கு எச்சரிக்கைகள், அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே முஹம்மத் (ஸல்) அவர்கள் தேவையின்றி மரத்தை வெட்டுவதை எச்சரித்து உள்ளார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லா இப்னு ஹப்ஷி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:- ''மனிதர்களும் இதர மிருகங்களும், அமர்ந்து இளைப்பாறும் வண்ணம் நிழல் தரும் மரத்தின் கிளையைத் தேவையின்றி வெட்டினால், இறைவன் அவனை நரகில் தலை கீழாகத் தொங்க விடுவான்'' [ஆதாரம் - அபூ தாவூத்]

எனவே நாம் மரத்தை அழிக்கும் விடயத்தில் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளவேண்டும். ★



---

# பொது அறிவுப்போட்டி இல. 34

1. திரு. மண்டேலாவின் சிறைவாசம் எத்தனை ஆண்டுகள் நீடித்தன? ... ... ... ... ... 35 ஆண்டுகள் / 27 ஆண்டுகள்
2. அண்மையில் உடைக்கப்பட்ட சரித்திரப் புகழ் பெற்ற சுவர் எது? ... ... ... ... ... சீனப்பெருஞ்சுவர் / பேர்லின்சுவர்
3. நட்சத்திரங்களில் இதுவும் ஒன்று? ... ... ... ... துருவன் / சிவாஜி
4. மஞ்சள் நிற ஆறு ஓடுவது எங்கே? ... ... ... ஜப்பானில் / சீனாவில்
5. இதற்கும் உருவம் இல்லை? ... ... ... ... ... நீர் / இறைவன்
6. இமயமலை அடிவாரத்தில் உள்ள மாநிலம் எது? ... பஞ்சாப் / மகாராஷ்டிரம்
7. 2 ஆம் உலகப் போரில் 3 ஆவது அணுக்குண்டு போடப்பட்ட இடம்? ... ... ... ... ஜப்பானில் / ரஷ்யாவில்
8. இவரைப் பிச்சைக்காரர்களின் சக்கரவர்த்தி என்றும் கூறுவர்? ... ... நேரு / காந்தி
9. சில சமயங்களில் இதுவும் துள்ளும்? ... ... மான் / மனம்
10. உலகில் மிகப்பெரிய விமானசேவை எங்கு உள்ளது? ... ... ... ... ... ரஷ்யாவில் / அமெரிக்காவில்
11. சூயஸ்கால்வாய் எங்கு உள்ளது? ... ... ... ... இஸ்ரேலில் / எகிப்தில்
12. இங்கும் மீன் பிடிக்க முடியும்? ... ... ... சஹாராபாலைவனம் / குளம்

பெயர்:- ....................................
விலாசம்:- ....................................
....................................

பொது அறிவுப்போட்டி இல: 34
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

—————— இங்கே வெட்டுக ——————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 7 - 03 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

---

வைத்திய சஞ்சீவி

# 'கல்லீரல்' என்னும் அதிசயத்தொழிற்சாலை

நமது உடலில் கல்லீரலானது மற்ற எல்லா உறுப்புக்களையும்விட மிகவும் வியப்பூட்டுகிற, உயிர்நாடியான செயல்களை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து கொண்டிருக்கிறது.

மூன்று இறாத்தல் எடையுள்ள இச்சுரப்பி, விலா எலும்புகளுக்கு அடியில் வலது மார்புக்குக் கீழே அமைந்துள்ளது.

நீங்கள் பஸ்ஸைப் பிடிக்க ஓடும்போது உங்கள் தசைகளுக்கு ஆற்றல் தர எரிபொருள் தேவைப்படுகிறது. அப்போது கல்லீரலிடம்தான் விண்ணப்பிக்கவேண்டும்.

அது 24மணிநேரமும் கிளைகோஜன் (Glycogen) என்கிற விலங்கின் மாவுச்சத்தைக் (Starch) கையிருப்பில் வைத்திருக்கிறது. அதில் சிறிதளவை எடுத்துக் குளுக்கோஸாக மாற்றி இரத்தக் குழாய்கள்மூலம் தசைகளுக்கு அனுப்புகிறது.

ஒவ்வொரு விநாடியும் நமது உடலில் ஒருகோடி சிவப்பு இரத்த அணுக்கள் மடிகின்றன. அவற்றின் சடலங்களை உடனடியாக அகற்றியாகவேண்டும். மண்ணீரல் (Spleen) அவற்றைச் சிதைக்கிறது.

பின்னர் கல்லீரல் அவற்றில் இருந்து உபயோகப் படக்கூடிய இரும்பு முதலிய சத்துக்களை மீட்டுக்கொள்கிறது. அவற்றை வைத்துப் புதிய சிவப்பணுக்களை உருவாக்குகிறது.

### இரத்தம் உறைய..:

பென்சில் சீவும்போது கையில் வெட்டுப்பட்டால் இரத்தம் வெளிப்படுகிறது.

உடனே பைப்ரினோஜன் (Fibrinogen) புரோத்ராம்பின் (Prothrombin) என்ற இரண்டு பொருள்கள் விரைந்து வந்து இரத்தத்தை உறையச் செய்து இரத்தப்போக்கை நிறுத்துகின்றன.

அவற்றைக் கல்லீரல் தான் உற்பத்திசெய்கிறது. இல்லாவிட்டால், சிறிய காயம் ஏற்பட்டால்கூட இரத்தம் நிற்காமல் தொடர்ந்து வெளியேறி மரணம் ஏற்படும்.

நம் உடலில் நுழைகிற கிருமிகளையும் வைரஸ்களையும் எதிர்த்துப் போராடி அழிக்கிற கிருமிக்கொல்லிகளைக் (Antibiotic) கல்லீரல் தான் உண்டாக்கிறது. அவை இல்லாவிட்டால், சின்னஞ் சிறிய முகப்பருகூட நம்மைக்கொன்றுவிடும்.

ஒவ்வொரு விநாடியும் கல்லீரல் செய்கிற ரசாயன ஜால வித்தைகளைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினம்.

இதுவரை அது செய்து வருகிற 500க்கும் மேற்பட்ட வேலைகளைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

இன்னும் பல வேலைகளையும் அது செய்வதாகப் புதிது புதிதாகக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

### ஜீரணத்துக்கு உதவி

கல்லீரலின் பணி, தசைகளுக்கு எரிபொருளை வழங்குவதுடன் நின்றுவிடுவதில்லை.

தசைகளில் குளுக்கோஸை எரிக்கும்போது லாக்டிக் அமிலம் (Lacticacid) தோன்றுகிறது.

லாக்டிக் அமிலம் ஒரு நஞ்சு. அது அதிக அளவில் உடலில்சேர்ந்தால் கெடுதல். கல்லீரல் அந்த லாக்டிக் அமிலத்தை மறுபடி கிளைக்கோஜனாக மாற்றுகிறது.

காலையில் சாப்பிடுகிற சிற்றுண்டி வயிற்றுக்குள் போனவுடன் கல்லீரலில் பல சிக்கலான ரசாயன வினைத் தொடர்கள் நிகழ ஆரம்பிக்கின்றன.

கல்லீரலிலிருந்து பித்த நீர் (Bile) சிறுகுடலில் பாய்ந்து கொழுப்புச்சத்துக்களை ஜீரணம் செய்ய உதவுகிறது.

சிறுகுடலிலுள்ள என்சைம்கள் கொழுப்பைக் கொழுப்பு அமிலங்களாக மாற்றுகின்றன. அவை கல்லீரலுக்குள் சென்று அங்கு உடல் கொழுப்புகளாக மாற்றப்படுகின்றன.

அதற்குள் இரைப்பையிலும் சிறுகுடலிலும் புரதங்கள், அமினோ அமிலங்களாக மாற்றப்படுகின்றன.

அந்த அமினோ அமிலங்களைக் கல்லீரல் பிளாஸ்மாப் புரதங்களாக மாற்றுகிறது.

அவை உடலில் திசுத்தசைகள் உருவாகத் தேவையானவை.

புரதம் ஜீரணிக்கப்படும்போது அமோனியா என்கிற நச்சுப்பொருள் உண்டாகிறது. கல்லீரல் மறுபடியும் தலையிட்டு அமோனியாவை யூரியாவாக மாற்றுகிறது. யூரியா சிறுநீரகங்களால் வெளியேற்றப்பட்டுவிடும்.

உட்கொள்கிற மதுசாரம் நிகோடின், போதைமருந்துகள் போன்ற நச்சுக்களைக் கல்லீரல் சிதைத்து அவற்றின் கேடு விளைவிக்கும் தன்மையைக் குறைக்கிறது.

### ஹோர்மோன் சமநிலை

கல்லீரல் நமது உடலின் ஹோர்மோன் சமநிலையையும் பராமரிக்கிறது. கல்லீரல் இல்லாவிட்டால் தைராய்டுச் சுரப்பியிலிருந்து வருகிற உபரி ஹோர்மோன் நம்மை எலும்புக்கூடுகளாக்கிவிடும்.

உபரியாக வருகிற ஹோர்மோன் அளவை கல்லீரல் அழித்துவிடுகிறது.

உடலில் உபரியாக உள்ள ஏ. டி. பி. கொம்ப்ளெக்ஸ் போன்ற வைட்டமின்களைச் சேமித்து வைக்கிற கிடங்காகவும் கல்லீரல் செயல்படுகிறது.

உடலிலுள்ள சுரப்பிகளிலேயே கல்லீரல் பெரியது.

இதயம் தன் ஆற்றலில் காற்பங்கைக் கல்லீரலுக்கு இரத்தம் வழங்குவதிலேயே செலவழிக்கிறது என்பதிலிருந்தே கல்லீரலின் முக்கியத்துவம் விளங்கும்.

நுரையீரல்களுக்கு மட்டும் தான் கல்லீரலைவிட அதிக அளவு இரத்தம் செல்கிறது. புதிதாக பிராணவாயு ஏற்றப்பட்ட இரத்தம் தமனிகள் வழியாகக் கல்லீரலுக்கு அனுப்பப்படுகிறது.

அத்துடன் குடல்களில் இருந்து மாசு இரத்தம் இதயத்திற்குச் செல்வதற்கு முன் கல்லீரலுக்குப் போகிறது. அதிலுள்ள நச்சுப்பொருள்கள் நீக்கப்பட்ட பிறகு அது இதயத்துக்குச் செல்கிறது.

கல்லீரல் பெருக்கக்கூடியது. உடலில் இரத்தத்தின் அளவு கூடிப்போய் இதயத்தின்மேல் அளவுக்கு மீறிய பணிச்சுமை ஏற்றப்பட்டு அதன் இரத்தத்தைச் செலுத்தும் இயக்கம் தடைபட்டுப் போகிற நிலைமை தோன்றுமானால் கல்லீரல் தனது கொள்ளளவைப் பெருக்கிக் கொண்டு உபரி இரத்தத்தைத் தன்னுள் சேமித்து வைத்துக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் எழுத்தறிவு பெருக
# அரசின் ஊக்கமே காரணமாகும்!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இவை தவிர நாடுகள் பலவற்றிலும் எழுத்தறிவு இன்மையால் அண்மைக்காலமாக ஏற்பட்ட சில நிகழ்வுகளும் எழுத்தறிவு ஆண்டு பிரகடனத்துக்கு வழிவகுத்தன.

உதாரணமாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

1. எதியோப்பிய நாட்டில் ஒரு தாய் மருந்துப்புட்டியில் எழுதப்பட்ட விவரத்தைப் படித்து அறியத் தெரியாததால் தனது குழந்தையை இழந்தார்.

2. அமெரிக்காவில் இறைச்சிக்காக மாடுகளை வளர்க்கும் பண்ணையில் வேலை செய்து வந்த தொழிலாளி ஒருவர் படிக்கத் தெரியாததால் உணவு என்று நினைத்து விஷத்தை வைத்து பண்ணை விலங்குகள் முழுவதையும் அழித்துவிட்டார்.

3. எழுத, வாசிக்கத் தெரியாத ஓர் இந்திய விவசாயி, வஞ்சிக்கப்பட்டு பெருவிரல் அடையாளமிட்டதால் தனது விவசாயக் காணியை இழந்தார்.

இவை போன்ற பல ஆயிரக்கணக்கான சம்பவங்கள் எழுத்தறிவு இன்மையால் உலகில் இடம்பெற்றுக் கொண்டேயுள்ளன. இத்தகைய இடர்பாடுகளில் இருந்து மனித சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சர்வதேச எழுத்தறிவு ஆண்டுப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சர்வதேச எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்கள்

இதுவரை 40க்கும் மேற்பட்ட நாடுகள் இத்தினத்தை ஒட்டிய நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து தொழிற்படத்தொடங்கிவிட்டன. சீனா போன்ற நாடுகள் பெரிய அளவில் ஆயத்தங்களைச் செய்து முடித்துவிட்டன.

இது பற்றிய பிரசுரங்கள் பல யுனெஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

சர்வதேச எழுத்தறிவு ஆண்டுக்கான இலச்சினையை, 82 நாடுகளைச் சேர்ந்த 300 விண்ணப்பங்களில் இருந்து தெரிந்து எடுத்துள்ளனர். அதன்படி, ஜப்பான் நாட்டவரான திரு. கொகிச்சி இமாஹிற்றா என்பவர் வரைந்த இலச்சினையே தெரிவாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது உறுப்பு நாடுகளில் இருந்து எழுத்தறிவற்றோர் வீதத்தினைக் குறைக்கும் வழிகளைக் கேட்டுள்ளது.

ஜப்பான் நாட்டுப் 'புதினப் பத்திரிகை ஒன்று எழுத்தறிவற்றோருக்குதவ ''தலைக்கு ஒரு யென்'' என்ற திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வருகிற மார்ச் மாத அளவில் யுனெஸ்கோ, உலக வங்கி ஆகியன தாய்லந்தில் திறமைசாலிகளுடனும் தீர்மானம் மேற்கொள்பவர்களுடனும் மாநாடு நடத்தி, எழுத்தறிவற்றோர் தொகையைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராயத்திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பான 2 ஆவது நிகழ்ச்சி வருகிற செப்டம்பரில் ஜெனிவாவில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகள், அரசாங்க மற்றும் அரசுசார்பற்ற, தனியார் நிறுவனங்கள் இதற்கு மதிப்பளித்து, அக்கறையுடன் செயற்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால்

மேலும் இதனை ஒரு பத்து வருடத் திட்டமாக அமைத்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டளவில் கல்வி கற்காதவர் தொகையை கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு செயலாற்றி வருகின்றனர்.

சர்வதேச எழுத்தறிவு ஆண்டுப் பிரகடனம் ஒரு கொண்டாட்டம் அல்ல; அது ஒரு செயற்பாட்டுக்குரிய விடயமாகும்.

கடந்த கால அனுபவங்கள் எழுத்தறிவு வீதத்தினை அதிகரிக்கச் செய்வது இலகுவானதல்ல என்பதைத் தெளிவுபடுத்தியுள்ள போதிலும் ஐ.நா. அதனை ஒரு சவாலாகவே எடுத்து வெற்றிகாண முயற்சி செய்கின்றது.

அந்தச் சவால், கற்பதற்கு விரும்பியும் வசதியில்லாது ஏமாற்றமடைந்துள்ள மக்களுக்கு ஒரு சந்தர்ப்பமாகவும் அமைகின்றது.

உலக சமூகம் எழுத்தறிவு ஆண்டுப் பிரகடனத்தைப் பெரிதும் விரும்பி வரவேற்கிறது. ஏனைய விடயங்களைப்போல் அல்லாது இப்பிரகடனத்தின் அறுவடையையே உலகம் எதிர்பார்த்து நிற்கிறது.

எழுத்தறிவு பெறத்தவறிய மக்களின் வாழ்வு, தொழில், சமுதாய நிலை ஆகியவற்றின் இழிநிலை வேதனைக்குரியதாக உள்ளதால் அவற்றில் மாற்றம் மிக அவசியமாக வேண்டப்படுகின்றது.

### இலங்கையின் பங்களிப்பு

இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தும், எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கையில் முன்னணியில் நிற்கிறது.

இலங்கையில் எழுத்தறிவு பெற்றோர் 87 சதவீதமாகும். இவ்வீத அளவு உயர்ந்து காணப்படுவதற்கு கல்வி வளர்ச்சியில் காலங்காலமாக இலங்கை எடுத்துவந்த நடவடிக்கைகளே காரணமாக அமைகிறது.

இலங்கையில் வழங்கப்படும் இலவசக் கல்வி முறை எழுத்தறிவு பெறுவோர் தொகையை அதிகரிப்பதற்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

இங்கு இலவசக் கல்வி வழங்கப்படுவதற்கு ஆரம்பகர்த்தாவான சேர். பொன்னம்பலம் அருணாசலமும் நடைமுறைப் படுத்திய திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களது சிந்தனை இலங்கையில் எழுத்தறிவு பெறுவோர் தொகையை அதிகரிக்கச் செய்தது.

1980 ஆம் ஆண்டில் இருந்து மாணவருக்கு வழங்கப்படும் இலவசப்பாடப் புத்தகங்கள், வறிய மாணவரையும் கல்வி கற்கச் செய்து கொடுத்துள்ளது. இம்முயற்சிக்கு ஆதரவு தந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு கல்வி உலகு கடப்பாடுடையது. எழுத்தறிவு வீதம் அதிகரிக்க இத்திட்டம் உதவியிருக்கிறது.

கடந்த ஆண்டு முதல் இலங்கை அரசு கொண்டு வந்த மதிய உணவுத் திட்டம் மாணவர்களைக் கவர்ந்துள்ளது. இது பாடசாலை வரவில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் கிராமோதயத் திட்டங்களும் கிராமப்புற மாணவர்கள் கல்வி பெறத்தக்க வசதிகளைச் செய்து கொடுத்துள்ளன. இதனால் பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்கள் கூட கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

சுயமொழிக்கல்வித் திட்டமும் இலங்கையில் எழுத்தறிவு வீதம் உயர்வதற்குத் துணை செய்துள்ளது. சுயமொழிக் கல்வி மாணவர்களின் அறிவு விருத்தியில் கூடிய பங்கு கொண்டு, எழுத்தறிவு வீத உயர்வுக்குத் துணை செய்துள்ளது.

இவை மட்டும் அல்ல, புலமைப் பரிசில்கள், அனைவருக்கும் விஞ்ஞானக் கல்வி வழங்கும் திட்டம், ஆரம்பப் பள்ளிக் கல்வி ஆகிய அரசுத் திட்டங்களும் இலங்கையில் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன.

எழுத்தறிவு பெற்றோர் வீதத்தை உலகில் அதிகரிக்க ஐ. நா. ஸ்தாபனம் 1990 ஆம் ஆண்டை சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்துவதற்கு முன்னரே இலங்கை கல்வி விருத்திக்கான தொழிற்பாடுகளை அமைத்துக் கொண்டது. அதன் மூலம் எழுத்தறிவு வீதத்தில் உயர்வை இலங்கை அடைந்துள்ளது.


இன்னும் சர்வதேச எழுத்தறிவு ஆண்டுக்கு வலுசேர்க்கும் வகையில் மேலும் பல நல்ல திட்டங்களை இலங்கை முன் வைக்கும் என்று எதிர்பார்ப்போமாக!

(முற்றும்)

- திருநாவுக்கரசு கமலநாதன் எம். ஏ. -

> உலக நாடுகளின் ஐக்கியத்துக்காகவும் சமாதானத்துக்காகவும் உருவாக்கப்பட்டு செயலாற்றி வருவது ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் என்ற அமைப்பாகும்.
>
> தனது குறிக்கோளை எய்தும் பொருட்டு அதனோடு இணைந்த வேறு சில திட்டங்களையும் ஐ. நா. ஸ்தாபனம் செயற்படுத்தி வருகிறது.
>
> கடந்த காலங்களில் பெண்கள் வளர்ச்சிக்காக சர்வதேச மகளிர் ஆண்டு, குழந்தைகள் உயர்வுக்காக சர்வதேசக் குழந்தைகள்ஆண்டு, வீடற்றோர் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டு — என்ற மனித சேவைகளின் பல அம்சங்களையும் கொண்டு ஐ. நா. செயற்பட்டு வந்துள்ளது.
>
> இந்த வரிசையில் 1990 ஆம் ஆண்டைச் சர்வதேச எழுத்தறிவு ஆண்டாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப்படுத்தி உள்ளது.
>
> சர்வதேச எழுத்தறிவு ஆண்டின் முக்கியத்துவம் பற்றிய கட்டுரையின் இறுதிப்பகுதி பிரசுரமாகிறது.

# சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 108
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

## போட்டி இல: 108

**இடமிருந்து வலம்:**

1. முத்தி 4. இன்னொரு சொல் சேர்த்தால் நோய் வரும் 5. ஸ்ரீ இராம பிரானின் குலம் 6. பதியச் செய் 7. இந்திரனின் நகரம் 8. ஒரு பொன் நாணயம் 9. யானை 10. முனைகளில் ஒன்று 11. பதங்களுக்குப் பிரித்துப் பொருள் கூறுதல் 12. கவிதை 13. அடர்ந்த முள் பகுதி 14. அதிர்ச்சி(குழம்பியுள்ளன) 16. கருமை 17. அலங்காரம் (தலைகீழ்).

**மேலிருந்து கீழ்:**

1. மிக்க களிப்பு 2. சூரியன் 3. முதற்கடவுள் 4. பெண்யானை 6. மிகுதிப்படுத்து 7. தேவலோகத்துப் பெண்கள் 10. ஓசை 11. உள்ளீடற்ற அரிசி 12. நிலங்களில் ஒன்று 13. மேகம் ஒரு சொல்லால் மறைந்து காணப்படுகிறது 15. தேன்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 28 - 02 - 1990

# சிறுகதை இலக்கிய வளர்ச்சி
# மொழிக்கு வளமூட்ட வேண்டும்!

> ஈழத்தமிழுலகம் நன்கறிந்த தமிழறிஞராக பல் கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள் விளங்குகின்றார்.
>
> நவநீத கிருஷ்ணபாரதியாரால் 'அகத்தியர்' என்று பட்டம் சூட்டப் பெற்றவர் திரு. குலரத்தினம்.
>
> 74 வயதிலும் தமிழ்ப்பணி புரிந்து வரும் 'இளைஞரான' திரு. குலரத்தினம், நூற்றுக்கு மேற்பட்ட பாட, பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் ஆய்வு நூல்களை ஆக்கித் தந்துள்ளார்.
>
> தமிழின் வளர்ச்சி, சமய நம்பிக்கை ஆகியன குறித்து திரு. குலரத்தினம் சஞ்சீவி வாசகர்களுக்கு என்று அளித்த பேட்டியின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

### கடவுள் நம்பிக்கை

கடவுளை உணர வேண்டும். அதற்கு உள்ளுணர்வு வேண்டும்.

கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது. நாக்கில் வைத்து ருசி பார்ப்பது, மெய்யில் காற்று வீசுவதை உடம்பால் அறிவது— ஆகிய உணர்வுகளைக் கொண்டு கடவுளை அறிய இயலாது.

1, 2, 3, 4, 5, 6 ஆகிய இலக்கங்களை யார் கண்டனர்?

ஒரு விரலைக் காட்டி இது 1, இரண்டு விரல்களைக் காட்டி இது 2 என்று கூற நாம் ஏற்கிறோம்.

பின்னர் மனிதன் விரல்களைப் பார்க்காமலே 1, 2, 3, 4 என்று அறிகிறான்.

பின்னர் 1, 2, 3, 4 போய் சூத்திரங்கள் வருகின்றன.

கடவுள் இருக்கிறார் என்பதைக் காட்டத்தான் ஆலயத்தை அமைக்கிறான்.

பழுத்த மாம்பழம் கீழே விழுகிறது. இந்த Law of Gravitation இல் அவனுக்கு நம்பிக்கை இல்லை என்றால், அது ஏன் விழுகிறது என்பதை அவனுக்கு விளங்கப் படுத்த இயலாது. ஏன் விழுகிறது? பூமி இழுக்கிறது. அது விழுகிறது.

### சமயச் சடங்குகள்

சமயச் சடங்குகள் உள்ளத்துக்கும் உடம்புக்கும் உரியவை. அவை உள்ளத்தையும் உடம்பையும் தூய்மையாக்கும்.

சைவசமயிகளின் நித்திய அனுட்டானத்தில் நீராடி, தூய்மையாகத் திருநீறு அணியும் போது உடம்பின் உறுப்புக்களை எல்லாம் தொழப் படுகிறது.

அதுவும் மந்திரங்களோடு சொல்லித் தொழும் போது அந்தந்த உறுப்புக்கள், அவயவங்கள் வலிமை பெறுகிறது என்பது வெளிப்படை. நோக்கு அல்ல, செயற்பாடு அதில் உள்ளது.

உதாரணத்துக்கு— 'நேத்திரோப்தியோ நம' என்று மந்திரம் சொல்லிக் கண்ணில் தொட்டால், அது அந்தக் கண்ணுக்கு ஒளியும் பிரகாசமும் அளிக்கும் என்பது உண்மை. அதை ஒருவராலும் மறுக்கமுடியாது.

'சிரேச நம' என்று சொல்லித் தலையில் தொடும் போது சிரசுக்குள் மூளைக்குக் கூட அதிர்வு மூலம் மந்திரமும் தொழுகையும் வேலை செய்யும்.

இராமர் வில் வளைக்க எழுந்தபோது எப்படி எழுந்தார்? — என்பதை 'பொழிந்தனை ஆகுதி வாய் வழி பொங்க எழுந்த செழுங்கனல் என்ன எழுந்தான்'— என்று கம்பர் வர்ணிக்கிறார்.

ஓம குண்டத்தில் இருந்து அக்னி சுவாலித்து செழுங்கனலாக எழுந்த முறையாக, சடங்கை நடத்த மந்திரத்தின் வலிமை வரும்.

ஐம்பூதங்கள் எம்மை ஆளுகின்றன; உருவாக்குகின்றன. பூதங்கள் தெய்தத்தன்மை வாய்ந்தவை.

ஷேக்ஸ்பியர் கூறுகிறார்: ஒரு மனிதனுடைய குணாதிசயங்களும் ஆளுமையும் பூதங்களினால் தான் உண்டானவை.

அவன் ஒரு மனிதன் என்று சொல்வதாக இருந்தால் பூதங்களின் கூட்டுறவு, பங்களிப்பு மனிதனில் சிறப்பாக அமைய வேண்டும்.

இதனை ஆங்கிலத்தில் — Elements are so composed in him that Nature will stand up say that he is a man — என்று ஷேக்ஸ்பியர் கூறுகிறார். ★

### சிறுகதை

வாசிக்கின்றவருக்கு மொழி வளத்தை ஊட்டுவதாக சிறு



கதைகள் இருக்க வேண்டும்.

வந்திச்சினம், பேசிச்சினம் என்று கதைகளில் எழுதப்படுவதை நான் விரும்பவில்லை.

வாருங்கள், இருங்கள், தண்ணீர் குடியுங்கள்— என்று எழுதலாம் தானே.

குறையான சொற்களை வைத்துக் கதை எழுதுவது மொழிவளத்துக்கு உதவாது.

பேச்சுத்தமிழ், எழுத்துத் தமிழ் என்று இருக்கிறது. பேச்சுத்தமிழை வீட்டில் பேசிக்கொள்வோம்......

சிறுகதையில் ...

மனைவி (கணவனிடம்):

தேத்தண்ணியைக் குடிச்சு விட்டுப்போங்கோ— என்று சொல்வதற்குப் பதில் 'தேனீரைக் குடித்து விட்டுச் செல்லுங்கள்'— என்று எழுதினால் நல்லதில்லையா!

யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் என்று ஒன்று இருக்கிறது. நாங்கள் அதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனக்கு உரியதல்லாத சிறுகதைத்துறை பற்றி நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.

நல்ல கருத்துள்ள சிறுகதைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மொழி வளம் பாதிக்கப்படாத முறையில் சிறுகதை வளர்ச்சி இருக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் 'கொமிக்ஸ்' புத்தகங்கள் பிரசுரமாகின்றன. அவற்றில் கூட அவர்கள் ஆங்கில மொழியை பழுதாக்கி எழுதவில்லை.

கொமிக்ஸ்' வாசிப்பது நல்லதா? என்ற கேள்விக்கு ஆங்லேயர்கள் 'Provided it improves the Standard of English, no harm in reading Comics', என்கிறார்கள்.

### புதுக்கவிதை, மரபுக்கவிதை பற்றி....

கவிதை எவர் பாடினாலும் சரி, புதிய, பழைய பாணியில் பாடினாலும் சரி, கவிதை என்று சொல்லி மதிப்புப் பெறுவதானால் அது உள்ளத்தில் இருந்து வருதல் வேண்டும்.

பித்தம் முற்றி சத்தி எடுக்கின்றவன் ஒருவன். அதுதான் சத்தி. மற்றவன் விரலை வாயினுள் விட்டு ஓங்காளித்து எடுப்பதும் சத்திதான்.

விரலை விட்டு ஓங்காளித்து சத்தி எடுக்குமாற்போல,

- க சி. குலரத்தினம் -

நாம் ஒரு வரியை எடுத்துக் கொண்டு அந்த வரிக்கு வேறு வரியை எதுகை, மோனை தேடிப்பார்த்து அமைகிறதை கவிதை என்று நான் சொல்லவில்லை.

புலமை முற்றினால் கவிதை தன்பாட்டுக்கு வரும்.

அதற்கு நாம் யாப்பு, அணி, சீர், தளை எல்லாம் கொண்டு போய் அளந்து பார்க்க முடியாது. அப்படி அளந்து பார்க்க, அது அமையும்.

வலிந்து பாடுகிறவர் யாப்பு அமைதி இல்லாமலேயே பாடி விடுகிறார்.

வெண்பாவில் எதுகை, மோனை நியதி. காசு, நாள், மலர், பிறப்பு என்று முடிய வேண்டும்.

கவி உள்ளம் கொண்டவன் பாடும் போது இவை எல்லாம் தானே வந்து விழும்.

### தமிழில் பத்திரிகைத்துறை

தமிழில் பத்திரிகைத்துறை வளர்ந்து விட்டது. இனி வளர இடமில்லை. இது என் அபிப்பிராயம்.

யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளுக்கு நல்ல மதிப்பு உண்டு. வினோபாஜி, யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'ஈழகேசரி' பத்திரிகையை விரும்பிப் படித்து வந்தார்.

'ஈழகேசரி' நிறுத்தப்பட்டது தெரியாத நிலையில் ஏன் 'ஈழகேசரி' பத்திரிகை கிடைப்பதில்லை என்று ஒரு நாள் வினோபா கேட்டாராம். ★

# ஆங்கிலத்தை அவமானப்படுத்த விரும்பாத கவிஞர் ஜோன்ஸன்

ஒலிவர் கோல்ட் சிமித் (Oliver Gold Smith) டாக்டர் ஜோன்சனின் (Dr. Johnson) ஆப்த நண்பன்.

இருவருக்கும் வறுமையே சொத்தாக இருந்தது. இருந்தும் பலதடவைகளில் கோல்ட் சிமித்தை ஜோன்சன் கஷ்டங்களில் இருந்து காப்பாற்றினார்.

ஆனால் கோல்ட் சிமித் நடுத்தர வயதில் காலமானது ஜோன்சனுக்கு அதிக துயரத்தைக் கொடுத்தது.

நண்பனைப் பற்றி சில வார்த்தைகள் கல்லறையில் இட வேண்டும் என்று எண்ணினார். அவர் அதனை லத்தீன் (Latin) மொழியில் எழுதினார். காரணம் அறிஞர் மத்தியில் அக்காலத்தில் லத்தீன் அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தது.

கோல்ட் சிமித்தின் நண்பர்களோ டாக்டர் ஜோன்சனை ஆங்கிலத்தில் எழுதும்படி ஒரு விண்ணப்பம் எழுதினர். யார் முதலில் கையொப்பம் இடுவது என்பதில் நண்பர்கள் மனம் குழம்பினர்.

காரணம் என்னவென்றால் 18 ஆம் நூற்றாண்டில் ஜோன்சன் இலக்கியத்தில் சர்வதிகாரியாக விளங்கினார்.

பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவர்களாய், கையொப்பங்களை மேலிருந்து கீழ் போடாமல் வட்டவடிவமாய் எழுதினார்கள். யார் முதலில் கையொப்பம் இட்டது என்பதை மறைப்பதற்காக.

ஆனால், ஜோன்சன் கூறியது வெஸ்ற்மிஸ்ரர் (Westmister) டவரை நான் ஆங்கிலத்தில் எழுதி அவமானப் படுத்த விரும்பவில்லை. அவர் லத்தீனில்தான் இவ்வண்ணம் எழுதினார். 'Nulium quod tettlgit non ornavrt' — He touched nothing that he did not adorn'

அதாவது, அவர் தொட்டதெல்லாம் அலங்கரிக்கப்பட்டன. (தொட்டதெல்லாம் பொன்னாகின) ★

- மானியூர் குமாரசாமி எம். ஏ. -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை.
ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. மகேந்திரன், மதி |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| சமூகக்கல்வி | — | திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| ஆங்கிலம் | — | திரு. ஹரிதாஸ் |

சஞ்சீவி சஞ்சிகை
24 - 02 - 1990 சனிக்கிழமை

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை
A/L DAY CLASS
நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வர்த்தகம் | — | திரு. சிவா |
| கணக்கியல் | — | திரு. யோகன் |
| | — | திரு. வாசன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| இந்து நாகரீகம் | — | திரு. MR. |

# பழனி, புதுவை தேர்தல் முடிவுகள்
# கலைஞரின் காலை வாரிவிடுமா?

**1989** ஆம் ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டில் தி. மு. க. ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியவில்லை.

திராவிட முன்னேற்றக்கழக ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் நாகபட்டினம் தொகுதியில் மட்டுமே வெற்றியீட்ட முடிந்தது.

ஆனால் வட இந்தியாவில் அதிக ஆசனங்களைப்பெற்று மத்தியில் ஆட்சி அமைத்த தேசிய முன்னணி அரசாங்கத்தில கபினெட் அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி ஒன்றை தி. மு. க. பெற்றது.

சொந்த மாநிலத்தில் ஒரு தொகுதியையும் கைப்பற்ற முடியாத தி. மு. க. வினால் மத்திய அமைச்சர் பதவியை எப்படி ஒப்புக்கொள்ள முடிந்தது?

**ஜெயலலிதா கிண்டல்**

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போக முயற்சித்தவன் கதையாக தி. மு. க. மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றதை அ. தி. மு. க. பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா கிண்டல் பண்ணியிருக்கிறார்.

அதுவும் சென்னை மரினா கடற்கரையில் நடந்த நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ் முன்னிலையில் இப்படிக் கிண்டலாகப் பேசி இருக்கிறார்.

இந்தக் கிண்டலுக்குப் பதில் சொல்ல முதலமைச்சர் கருணாநிதியால் முடியவில்லை.

இன்று திரு. கருணாநிதிக்குத் தேவை ஒரு வெற்றி தான். அந்த வெற்றி புதுவையில் கிடைக்குமா? அல்லது பழனியில் கிடைக்குமா? அல்லது இரண்டிலுமே கிடைக்குமா? என்பது எதிர் வரும் 27 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுவிடும்.

**தேர்தல் போட்டியில் உஷா**

ஆம்! அன்றுதான் பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும் பாண்டிச்சேரி மாநில சட்டசபைக்கும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

கடந்த நவம்பரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பழனி தொகுதியில் தேர்தல் நடைபெறவில்லை. காரணம் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் மரணமானதே.

51 வேட்பாளர்கள் பழனியில் போட்டியிடுகிறார்கள். இந்திரா காங்கிரஸுக்கும் தி. மு. கவுக்கும் இடையே


கருணாநிதி

தான் கடும் போட்டி நிலவுகின்றது. பாட்டாளி மக்கள் கட்சியும் போட்டியிடுகிறது.

முதல் தடவையாக கருணாநிதியின் பழைய சகாவான திரைப்பட சகலாகலாவல்லவன் ராஜேந்தரின் தாயக மறுமலர்ச்சி கழகத்தின் சார்பில் ராஜேந்தரின் மனைவி உஷாவும் போட்டியிடுகிறார்.

தேர்தல் ஓட்டப்போட்டியில் இந்த உஷா எத்தனை

> **எனக்கு வேண்டும் ஒரு வெற்றி என ஏங்கும் கலைஞர்.**

யாவது இடத்தில் இருப்பார் என்பதும் 27 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுவிடும்.

பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலில் 30 தொகுதிகளுக்கு நடைபெறும் தேர்தலிலும் முன்பு போலவே இம்முறையும் இந்திரா காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி ஒரு புறமும், தி. மு. க. இடது, வலது கம்யூனிஸ்டுகள் மற்றும் ஜனதாதள் அடங்கிய கூட்டணி ஒரு புறமும் களத்தில் இருக்கின்றன.

**கவர்ச்சி அரசியல்**

பழனியும் ஜெயலலிதாவின் கவர்ச்சி அரசியலுக்குட்பட்ட தென்மாவட்டத் தொகுதியில் ஒன்று என்று கூறப்படுகிறது.

ஜெயலலிதாவின் அரசியலை வெற்றிகொள்ள இது வரை தலைவர் கருணாநிதி செய்துவந்த முயற்சிகளை ஒன்றும் அவ்வளவு பலனளிப்பதாக தெரியவில்லை. சென்றவாரம் திருச்சியில் நடந்த தி. மு. க. மாநில மாநாட்டை முதலமைச்சர் கருணாநிதி ஒரு திருப்புமுனை என்று வர்ணித்தார்.

அப்படி என்ன திருப்புமுனை அங்கு ஏற்பட்டது என்று மாற்றுக்கட்சியினர் கேட்கின்றனர்.

எம். ஜி. ஆர் உயிருடனிருந்து தமிழக அரசைக் கைப்பற்றிய சமயம் அவரது செல்வாக்கை வீழ்த்துவதற்கு மலையாளி என்று குறுப்பிட்டு பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால் தமிழகம் 10 ஆண்டுகளுக்கு மேலாக எம். ஜி. ஆரின் ஆட்சியையே தெரிவுசெய்து வந்தது.

அதுபோல இப்போது பிராமண எதிர்ப்புப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருப்புமுனை இதுவா?**

திருச்சி தி. மு. க. மாநாட்டில் பிராமண எதிர்ப்புப் பிரசாரமே மேலோங்கி நின்றது என்றும், அதனால்தான் திருச்சி மாநாட்டை திருப்புமுனை என்று கருணாநிதி சொன்னாரா என்று அ. தி. மு. க.வினர் கேட்கின்றனர்.

ஜெயலலிதாவின் அரசியல் சவாலை தேர்தல் களத்தில் எதிர்கொள்ள முடியாமல் அவரது சாதியை சம்பந்தப்படுத்தி வெற்றியீட்ட தி. மு. க. முனைகிறது என்று அ. தி. மு. வினர் குறை கூறுகின்றனர்.

கருணாநிதியின் புதிய போக்கு அவருடைய அச்ச உணர்வையே காட்டுதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய அரசியல் உத்திகளைக் கருணாநிதி கடைப்பிடிக்கத்தான் வேண்டுமா? என்றும் அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

**சிறப்பான ஆட்சி**

அவரது ஓராண்டுகால ஆட்சியில் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நிர்வாகம் சீராக நடத்தப்படுகிறது. பூதாகாரமான பிரச்சினைகளை கலைஞர் திறமையாகச் சமாளித்துவிட்டார்.

போதாக்குறைக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள தேசிய முன்னணி ஆட்சி தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

இந்த நிலை தொடரின் தி. மு. க அரசின் செல்வாக்கு அடுத்த தேர்தலுக்குள் ஓங்கிவிடும் வாய்ப்புக்கள் உள்ளன.

— இப்படி ஒரு சாரார் கூறுகின்றனர்.

**பழனி புதுவை தேர்தலின் பின்னர்...**

பழனியிலும், புதுவையிலும் தி. மு. க. வெற்றி பெற்றுவிட்டால் கருணாநிதி எதிர்பார்க்கும் திருப்புமுனையை அவரது கட்சி பெற்றுவிடும். மாறாக, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் போல பழனி, புதுவை முடிவுகள் அமைந்து விட்டால் தி. மு. கவுக்கு மேலும் சரிவு ஏற்படுவதைக் கருணாநிதி எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதுதான் அடுத்த கேள்வி.

★

**- தீபன்ராஜா -**

> வட இந்தியாவில் ஏழு மாநில சட்டசபைகளுக்கும் தென்னிந்தியாவில் பாண்டிச்சேரி சட்டசபைக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி பொதுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.
>
> தமிழ்நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் அன்று நடைபெறும்.
>
> அவற்றை ஒட்டிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

### அறிவித்தல்

10-02-1990 சஞ்சீவியின் 3 ஆம் பக்கத்தில் பிரசுரமான சிங்கர் நிறுவனத்தின் குளிர்சாதனப்பெட்டி தொடர்பான விளம்பரம் காலந்தப்பியதொன்றாகும் என்பதை அறியத் தருகின்றோம். இதனால் விளம்பரதாரருக்கும் வாசகர்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக அவர்கள் இருசாராருக்கும் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இது குறித்து அவர்கள் மன்னிப்பாராக.

- நிர்வாகம்

# வட இந்திய மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள்
# ராஜீவின் தலைமைக்கு சவாலாக அமையுமா?

கடந்த நவம்பரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வட இந்திய மாநிலங்களில் தேசிய முன்னணியும் பாரதிய ஜனதாக் கட்சியும் அமோக வெற்றி பெற்றது தெரிந்ததே.

அவற்றில் ஏழு மாநிலங்களில் இந்த மாதம் 27 ஆம் திகதி சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. 23 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்ற கேள்விதான் எல்லா பெரிய அரசியல் கட்சிகள் முன்பும் எழுந்துள்ளது.

**மரபு தொடருமா?**

1977, 1980, 1985 ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர் மத்திய அரசியல் ஆட்சிக்கு வந்த கட்சிதான் வட இந்திய மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றன.

இந்த மரபு தொடருமானால் வட இந்திய மாநிலங்கள் பலவற்றில் வரும் தேர்தல்களில் தேசிய முன்னணியும் பாரதிய ஜனதா கட்சியும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும்.

இவை இரண்டும்தான் வருகின்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு பெரும் சவாலாக இருக்கின்றன.

**மாநில நிலை**

தேர்தல் நடைபெறும் மாநிலங்களும் 1985 இல் கடைசியாக நடந்த சட்டசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட கட்சி நிலவரமும் வருமாறு;

**பிஹார்:** 60.49 சத வாக்குகளைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் 324 தொகுதிகளில் 196 இடத்தைப் பிடித்தது. லோக்தள் கட்சிக்கு 46 இடங்களே கிடைத்தன.

**குஜராத்:** 81.87 சத வாக்குகளைப்பெற்ற இந்திரா காங்கிரஸ் மொத்தமுள்ள 182 தொகுதிகளில் 149 இடங்களைப் பிடித்தது. ஜனதா கட்சிக்கு 14 இடங்களே கிடைத்தன.

**இமாலயப் பிரதேசம்:** இங்கு 85.29 சத வாக்குகள் பெற்று 58 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியது. பாரதிய ஜனதாக் கட்சிக்கு 7 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

> **மன்னிக்க வேண்டுகிறேன் என்று கூறும் ராஜீவ்.**

**மத்திய பிரதேசம்:** 78.13 சதவீத வாக்குகளைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் மொத்தமுள்ள 320 தொகுதிகளில் 250 இடங்களைப் பிடித்தது. பாரதிய ஜனதா 58 இடங்களில் வெற்றியீட்டியது.

**மகராஷ்டிரம்:** இந்திரா காங்கிரஸ் 56.25 சதவீத வாக்குகளைப் பெற்று 162 தொகுதிகளை வென்றது. சோஷலிஸ்ட் காங்கிரஸ் 54 இடங்களைப் பிடித்தது.

**ஒரிஸ்ஸா:** 79.59 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸுக்கு 117 தொகுதிகள் கிடைத்தன. ஜனதா கட்சி 21 தொகுதிகளைப் பிடித்தது.

**ராஜஸ்தான்:** 56.50 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 113 தொகுதிகளில் வென்றது. பாரதிய ஜனதா 39 தொகுதிகளை பிடித்தது.


ராஜீவ்காந்தி

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த 3 மாதங்களில் இம்மாநிலத் தேர்தல்கள் நடத்தப்படுகிறது.

ராமஜன்ம பூமி பிரச்சினை காரணமாக வட இந்திய மாநிலங்களில் உருவான இந்து - முஸ்லிம் பேதம் தான் கடந்த நவம்பர் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோற்றதுக்குக் காரணம் என்று ராஜீவ் ஆதரவாளர்கள் கூறினர்.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் மூலம் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் ஏற்படுத்திய அவமானம் காரணமாகவே இந்திரா காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது என்று தேசிய முன்னணி ஆதரவாளர்கள் கூறினர்.

இதனிடையில் விபிசிங்கின் மூன்று மாதகால ஆட்சியில் இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே ... யுத்தத்தையே ஏற்படுத்தும் அளவுக்கு காஷ்மீர் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

சிங்கின் தலைமையிலான ஆட்சி பலமற்றது என்று பாகிஸ்தான் கருதியதினாலேயே, இந்த நெருக்கடியை பாகிஸ்தான் உருவாக்கியது என்று ராஜீவ் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**மன்னிப்புக் கோரும் ராஜீவ்**

இதனிடையில் — இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அதிருப்தி கொண்டோர் பலர் வெளியேறி தேசிய முன்னணியில் சேர்ந்து வருகின்றனர்.

''கட்சி கடந்த காலத்தில் தவறு இழைத்து விட்டது. அவற்றை மன்னித்துக் கொண்டு மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸுக்கு வாக்களியுங்கள்'' என்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்ளும் அளவுக்கு ராஜீவ் காந்தி தள்ளப்பட்டிருக்கிறார்.

கட்சிக் கட்டுக்கோப்பு குலையாமல் இருக்க இந்திரா காங்கிரஸ் இத்தேர்தல்கள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றாக வேண்டும் என்று ராஜீவ் விரும்புகிறார்.

இத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் தோல்விகண்டால் அது ராஜீவின் தலைமைக்கே ஆபத்தாக முடியும் என்று கருதப்படுகிறது.

**மாநிலங்களிலும் ஸ்திரமற்ற அரசு**

மத்தியில் சிறுபான்மை அரசு இருந்தாலும் மாநிலங்களில் பலமான ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதில் தேசிய முன்னணியும் பாரதிய ஜனதா கட்சியும் முயற்சிக்கின்றன.


மத்தியில் சிறுபான்மை அரசு அமைக்கப்பட்டது போன்ற நிலைதான் பெப்ரவரி 27 இல் நடைபெறும் தேர்தல்களைத் தொடர்ந்து வட மாநிலங்களிலும் ஏற்படக்கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.


### பொது அறிவுப் போட்டி இல - 33
**சரியான விடைகள்**

1. மூங்கில், 2. பெல்ஜேட், 3. சத்தியம், 4. மனம் 5. கானல், 6. மணிமேகலை, 7. குமரகுருபரர் 8. கொலம்பியா, 9. செப். 3, 10. பல், 11. ஆதிரை 12. அண்ணா.

இப்போட்டிக்குச் சரியான விடைகளை எவரும் அனுப்பவில்லை என்பதை அறியத்தருகிறோம்.

**சிக்மா பம்ப்ஸ்**
**CEYGMA PUMPS**





உங்கள் தேவைகளுக்கேற்ற
மின் மோட்டர்கள்
**ELECTRIC MOTOR PUMPS**
$\frac{1}{2}$ HP, $\frac{3}{4}$ HP, 1 HP, $1\frac{1}{2}$ HP
நீர் இறைக்கும் இயந்திரங்கள்
**Engine Driven Pumps**
- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது **Indian Villiers MK 12**
- இங்கிலண்ட் விலியர்ஸ் பொருத்தப்பட்டது **England Villers C 12**
- குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது **Kubota KS 160**

இப்பொழுது கையிருப்பில் உண்டு. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் (Guarantee) உண்டு. பழுதடைந்த பம்புகள் அதி விரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும். இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:
**UNITED AGRO ENGINEERING**
274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
தொழிற்சாலை: நாவற்குழி, கைதடி.
(C/3804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org